செந்தமிழ்

தொகுதி 85 டிசம்பர் 91 பகுதி 4

காலாண்டு இதழ்

ஆசிரியர் மா தனுக்கோடிபாண்டியன், பி.ஏ.,பி.எல்.

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் டாக்டர்
நா. பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம் லிட்.,பிஎச்.டி.

பொருளடக்கம்

14.

1. கம்பர்
K.G. சேஷய்யர் B.A.B.L. 1

2. இலக்கண ஈடுபாட்டில் வையாபுரிப்பிள்ளை
முனைவர் சா. கிருட்டிணமூர்த்தி
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 9

3. சுந்தரரும் மெய்கண்டாரும்
15 டாக்டர் ஆ. ஆனந்தராசன்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை 19

4. சீக்கியக் குருதுவாராவும் வழிபாட்டு முறைகளும்
1 அ. நடராசன் எம்.ஏ.எம்.பில்.,டிப்.பஞ்சாபி
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை 23

5. இருமொழி அகராதிகளில் இலக்கணச் செய்திகள்
டாக்டர் ஏ. ஆதித்தன்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை 31

6. பாரதியின் காதல் தாகம்
டாக்டர் கதிர். மகாதேவன்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை 37

7. மதுரைத் தமிழ்ச் சங்கமும்
பாண்டித்துரைத் தேவரும்
புலவர் அரங்கசாமி
திருவையாறு, தஞ்சை மாவட்டம் 44

8. நூல் மதிப்புரை
டாக்டர் ம. திருமலை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை 54

9. நினைவு அஞ்சலி

10. தமிழ்ச்சங்க செய்திகள்

பாராட்டுகிறோம்

மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலர் திரு. மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ., பி எல்., அவர்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக ஆளவையினரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். மூத்த வழக்கறிஞராகிய இவர் பணி சிறந்தோங்க இறைவனை வழுத்துகிறோம். வாழ்க பல்லாண்டு; வளர்க அவர்தம் தொண்டு.

நா. பாலுசாமி
பொறுப்பாசிரியர்

கம்பர்

—K.G. சேஷய்யர் B.A.B L.

இலக்கியப் பயிற்சியும் கவிதானுபவமும் சர்வகலாசாலைகளிற் குன்றி வருகின்றன என்று பரிதாபத்தோடு ஸர் எட்மண்டு கோஸ் என்ற ஆங்கிலபண்டிதர் சிலநாள்கட்குமுன் பிரஸ்தாபித்ததாக ஆங்கில வர்த்தமானப்பத்திரிகை யொன்றில் வாசித்தேன். ஆங்கிலநாட்டுக் கலாசாலைகளிலேயே இவ்வாறு காணப்படுமானால், நம் நாட்டிலுள்ள கல்லூரிகளில் தமிழிலக்கியப்பயிற்சி மெலிந்து வருவது வியப்புக்கிடமாகாது. ஆயினும், தொன்றுதொட்டு இன்றுகாறும் பரிஷ்கார முதிர்ந்த பாஷைகளுள் ஒன்றாய் நிலைத்துவரும் தமிழின் அருமை பெருமையை அறிந்தவரெவரும் நம்மொழியின் தற்கால மெலிவுகண்டு மனத்துயர மடையாதிரார். பல்லாயிரமாண்டுகட்கு முன் செழித்தோங்கிய சமரியநாகரிக (Sumerian Civilization)த்தோடு காலத்திலும் ரீதியிலும் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் திராவிடநாகரிகம் தமிழர்க்குரித்தான சிறந்த செல்வமாயிருக்க, அதன் முதிர்கனியாகிற தமிழிலக்கியம் தற்சமயம் கல்லூரிகளிலும் மாணவர்களாலும் ஆதரிக்கப்படாமற் சோர்வடைந்து தள்ளாடும் நிலையுற்றிருப்பதை நினைக்க மனம் வருந்துகின்றது உலகவாழ்க்கையில் நாப்பெறக்கூடிய பேறுகள் பலவற்றுள்ளும், கவிதானுபவம் சிறந்ததோர் பேறென்பதும், நமக்கு உன்னதமான இன்பம் தரக்கூடியதென்பதும் என் துணிவு. தமிழ்ப்பாஷையிற் கவிதையிற் கம்பருக்குமேலான பெயரில்லையென்பதை விளக்க நம் முன்னோர் கம்பருக்குக் கவிச்சக்ரவர்த்தி யென்று புகழ்நாமஞ் சூட்டியிருக்கிறார்கள். வான்மீகி, வியாசர், காளிதாஸன் போன்ற ஆரியபாஷாகவிசிரேஷ்டர்களோடும், ஹோமர், வெர்ஜில், டாண்டே, ஷேக்ஸ்பியர், மில்ட்டன், கீதே, ஷில்லர் போன்ற மேல்நாட்டுக் கவிசிரேஷ்டர்களோடும் சமப்படுத்திக் கூறக்கூடிய கவித்திறம் பெற்ற மிக்காரென்றே கம்பரைக் கருதவேண்டும். சில அபிமானிகள் மற்றெல்லாக் கவிகளையும்விடக் கம்பர் கவிப்பெருமை பெற்றவ

ரென்றும் கூறுகின்றனர். அதனால், கம்பர்விஷயமாக இன்று சற்று நாம் பொழுது போக்குதல் தவறாகாதென்று நினைக்கிறேன். தமிழிலக்கியப்பெருக்கத்தில், கம்பரருளிய இராமாயணத்திலுஞ் சிறந்த நிதியமில்லையாகையால், அப்பெருங்காவியத்தையும் அவகாசமுள்ள மட்டில் உற்றறிதல் தமிழ் மாணவர்க்கு மிகையாகாது.

தமிழ்நாட்டில் முற்காலத்துக்கவிகளின் பெயர்கள் பல இயற்பெயர்களாகவிராமல், குறிப்பு அல்லது ஒட்டுப்பெயர்களாகவிருக்கக் காண்கிறோம். சில பெயர்கள் பிறந்த ஊரை யொட்டியனவாயும், சில தொழில் அல்லது ஜாதிப்பெயர்களை யொட்டியனவாயும், வேறு சில அவரவர் பெருமையைக் குறிப்பனவாயு மிருக்கின்றன. தொல்காப்பியர். நக்கீரர், திருவள்ளுவர், திருவாதவூரர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு, ஒட்டக்கூத்தர், புகழேந்தி, வில்லிபுத்தூரர், பெரியாழ்வார், நம்மாழ்வார் போன்ற பெயர்கள் ஒட்டுப்பெயர்களாகவிருத்தல் காண்க. அவ்விதமே கம்பர் பெயரும் ஒட்டுப்பெயரென்று நினைக்கக் கிடக்கின்றது. கம்பங்கொல்லை காத்த காரணம்பற்றி இப்பெயர்வந்ததென்று சிலர் கூறுவர் கச்சிப்பதியீசனாம் ஏகம்பரதுபெயரின் மரூஉவென்பர் வேறுசிலர். ஆனால், இப்பெயர் அவர்பிறந்த நாடுபற்றி அவர்க்கமைந்ததென்று நான் ஊகிக்கிறேன். அவர் பிறந்தநாடு கம்பநாடு. இது பிற கவிகள் கம்பரைக் கம்பநாடனென்று வழங்குவதால் தெற்றென விளங்கும். ''தேனேறும் இன்சொ லிராமாயணத்தைத் திருவழுந்தூ ரானே றனைய தமிழ்க்கம்பநாடன்'' என்று பாண்டிமண்டலசதகத்திற் கூறியிருக்கின்றது. இவரது சிறந்த பக்தியின் காரணமாக இவர்க்குக் கம்பநாட்டாழ்வாரென்னும்பெயர் வழங்கிவருவதுங் காண்க. இவர் பிறந்தவூர் சோழநாட்டில் திருவழுந்தூர். அது குற்றாலம் ரயில் வேஸ்டேஷனுக்கு இரண்டுமைல் தென்கிழக்கிலுள்ளது. இவர் வீடிருந்ததாகச் சொல்லு மிடத்திற்குக் **கம்பர்மேடு** என்று பெயரிப்பொழுதுங் கூறப்படுகிறது. அம்மேட்டில் முன் வீடிருந்ததற்கு லட்சியங்கள் பல இன்றுங் காணப்படுகின்றன. இந்தப் புனிதமான இடத்தைக் கம்பரது ஞாபகார்த்தமாகச் சிரத்தையா யிரட்சித்து வரவேண்டிய கடமையை நம் தமிழ்நாடு முழுதுமே பொறுக்கவேண்டும். இப்பூமியைத் தமிழர் யாவர்க்கும் பொதுவான பூமியாக ஆர்ச்சித்துத் தமிழ்நாடு பாதுகாக்கவேண்டும். கம்பர் அழுந்தூரிற்பிறந்தாரென்று நாமறிவோமேயன்றி, அவரது தாய் தந்தையரைப்பற்றி நமக்கொன்றுந் தெரியாது. திருவழுந்தூரில் ஒரோச்சன் வீட்டுப் புறக்கடையிற் கம்பரை யவர்தாய் பிரசவித்தாளென்றும், குழந்தை பிறந்தவுடன்

தாய் உயிர் துறந்தாளென்றும் கர்ணபரம்பரையான கதையொன் றுளது. அவர் ஜாதி யின்னதென்று புலப்படவில்லை. அவ்வூரிற் பிடாரிகோவிற் பூசாரியாயிருந்த ஓரோச்சன் புதல்வன் என்பர் சிலர். ''சீரணி சோழநாட்டுத் திருவழுந்தூர் உவச்சன்'' என்று தமிழ் நாவலர்சரிதை கூறுகின்றது. பிறப்பாற் கம்பர் என்ன ஜாதியராயிருந்த போதிலும், அவரை யிளமையில் வளர்த்தது ஒருவச்சன். அவரோர் காலத்திற் கோவிற் பூசாரியாக இருந்தாரென்பது, ''கைம்மணிச் சீரன்றிச் சீரறியாக்கம்பநாடன்'' என்று அழுக்காறடைந்த வொரு புலவர் பாடியிருப்பத'ற் காணக்கிடக்கின்றது. உவச்சன் வீட்டில் வளர்ந்துவரும் நாளில், உரியவயதிற் கல்விபயிலக் கதிராமங்கல மென்று இக்காலம் பெயர் வழங்கிவரும் வெண்ணெய்நல்லூரிற் சடையப்பபிள்ளை யென்ற சிறந்த காணியாளரிடம் கம்பர் சேர்ப் பிக்கப்பட்டார் கதிராமங்கலம் குற்றாலத்திற்கு இரண்டுமைல் வட மேற்கிலுள்ளது. சடையப்பவள்ளலின் பேருதவியாற் கம்பர் கல்வி பயின்று, கல்வியிற் பெரியவன் கம்பனென்று யாவரும் வியந்து கூறு மாறு மேன்மையடைந்தார். வடமொழியிலும் தென்மொழியிலுமுள்ள சிறந்த நூல்பலவும் நன்றாய்க் கற்று, அவற்றுட் புகுந்து, சத்தைச் செவ்வனே யாராய்ந்து கிரகித்தவர் கம்பர் என்பது அவர் இராமா யணத்தால் நன்கு விளங்குகின்றது. கல்வி கேள்விகளிற் செழித் தோங்கி, எங்கும் யாவரும் புகழ்ந்து போற்றும்படி கம்பர் சிறப்புப் பெறுதற்குக் காரணன் சடையப்பவள்ளலே. 7.481)

''பெற்றும் வளர்த்தும் வித்தைதனைப்
பேணிக் கொடுத்தும் பெயர்கொடுத்தும்
பற்ற வருப்பா லமுதளித்தும்
பகைத்த வறுமைப்பயந்தீர்த்தும்
கற்ற முதுநூற் றிருவழுந்தூர்க்
கம்பன் தழையக் கருணைசெய்தோன்''

வெண்ணெய் நல்லூர்ச் சடையப்பரேயென்றுசோழ மண்டல சதகம் கூறும். கம்பரை யித்துணை நலம் பெறச் செய்து தவிய கீர்த்திமிகுந்த சடையப்பவள்ளலைக் கம்பர் இராமாயணத்திற் பல இடங்களில் அமைத்து வைத்துப் புகழ்ந்து பாடியிருப்பது அதிசயமாகாது.

''எண்ணத் தகும்பா ருள்ளளவும் இரவி மதிய மெழுமளவும்
கண்ணற் கினிய சயராம கதையி னொருபான் கவிமுழுதும்
வெண்ணெய்ச் சடையன் சடையனென விறலார் கம்பன்
விளங்கவைத்த

வண்ணத் துறைவே ளாண்பெருமான் வளஞ்சேர் சோழ
மண்டலமே.''

என்ருர் சோழ மண்டலசதகத்தார். சடையப்பரை மாத்திரமன்று, அவர் குலமான வேளாளர் குலத்தையும் கம்பர் புகழ்ந்து கூறுவர். ''உழுங் குலத்திற் பிறந்தாரே யுலகுய்யப் பிறந்தாரே'' என்பது கம்பர்கூற்று இவ்வாறு வேளாளரை வியந்து கூறியது பற்றிக் கம்பர் வேளாளர் குலத்திற்றோன்றியவர் என்பர் சிலர்.

கம்பரின் காலம் யாது? இதைப்பற்றி அபிப்பிராய பேதங்களிருக்கின்றன. இதை நிர்ணயிக்க இராமாயணகாவியத்துள் அகச்சான்று காணப்படவில்லை. ஆனால், இராமாயணத்தைச் சிறப்பித்துச் சொல்லும் கவிகளிலொன்றிற் காலங் குறிக்கப்பெற்றிருக்கிறது. அச் செய்யுள் வருமாறு:-

எண்ணிய சகாத்தம் எண்ணூற் றேழின்மேற் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை பங்குனி யத்த நாளிற்
கண்ணிய அரங்கர் முன்னே கவியரங் கேற்றி னானே.

கம்பரியற்றிய இராமாயணம் ஸ்ரீ ரங்கநாதன் சந்நிதியில் சகம் 807-ல் அரங்கேற்றப் பெற்ற தென்று இச்செய்யுளால் விளங்குகின்றது. இதற்கு நேரான ஆங்கில வருஷம் 885. இதைப் புறக்கணிக்க ஒரு கராணமும் நான் காணவில்லை. கப்பராமாயணம் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீமந் நாதமுனிகள் தலைமை வகித்த வித்வசபையில் அரங்கேற்றப் பெற்ற தாகவும், கவியின் பெருமை நோக்கி அந்த வைணவ ஆசாரியர் கம்பருக்குக் கவிச்சக்கரவர்த்தி யென்னும் புகழ்நாமஞ் சூட்டினதாகவும் கர்ணபரம்பரை யுளது. ஆசாரியபரம்பரையில் ஸ்ரீமந் நாதமுனிக்கு ஆறாவது பரம்பரையினராக ஸ்ரீராமாநுஜர் கருதப்படுகிறார். ராமாநுஜாசாரியர் காலம் கி.பி. 11-ம் நூற்றாண்டின் முற்பாதி யென்பார்கள். ஆகவே நாதமுனிகள் காலம் கி.பி. 9-ம் நூற்றாண்டின் பிற்பாதியென்று கொள்ளலாம் இராமாயணம் அரங்கேற்று காலமாகச் சொல்லப்படும் கி.பி. 885-ம் நாதமுனிகள் காலமும் ஒத்துவரும். ''கொல்லிமலையுடைய கொற்றவா'' என்று கம்பர் சோழனைச் சிறப்பித்துப் பாடிய ஒரு தனிப்பாசுர முளதாகப் பெரியோர் கூறுவர். கொல்லிமலை கொங்க நாட்டைச் சேர்ந்தது. சோழன் கொங்கு நாட்டை வென்றகாலத்திற் கணித்தாக இச்செய்யுள்

பாடப்பட்டிருக்க வேண்டும். கொங்கு நாடு வென்ற சோழன் விஜயபாலயன் மகன் ஆதித்த சோழராஜகேசரிவர்மன். அவன் காலத்தோடும் கி.பி. 885 ஒத்திருக்கிறது. இராமாயணம் அரங்கேற்று காலம் அதிக தூர காலமாகச் சொல்லப்பட்டிருந்தால், கம்பருக்கு அபாரமகிமை ஸ்தாபிக்கக்கருதித் தவறாக வீணே பெரும் பழமை கற்பித்தாரென்று சொல்லலாம். ஆனால், சகம் 807 அவ்வளவு பழமையான காலமன்று. இத்திகதி கேவலம் கற்பனையென்று நாட்டும் சரியான பிரமாணமிருந்தாலன்றி இந்தக் கர்ணபரம்பரையை ஒப்பாமல் தள்ளிவிட நமக்கு நியாயமும் பாத்தியமும் இல்லை. சில வித்வான்கள் கம்பர் காலம் 11–ம் நூற்றாண்டென்று கூறுவது நான் அறிவேன். ஆனால் அதற்கு அவர்கூறும் நியாயங்கள் போலி நியாயங்களென்றே கூற வேண்டும். அவர்கூற்றை யொப்புக் கொள்ள நானறிந்த மட்டும் தக்க பிரமாணமொன்றும் அவர் எடுத்துக் காட்டவில்லை இவ்விஷயத்தை விரிவாக ஆராய்தற்கு இடமுங் காலமும் இஃதன்று; அதனாலிம்மட்டோடு நிறுத்துகிறேன்.

கம்பர் மதக்கொள்கையைப்பற்றியும் அபிப்பிராய பேதங்களுள. இராமாயண காவியத்திற்கு ஏற்புடைக்கடவுள் விஷ்ணுவாதலால், அந் நூலில் எண்ணற்ற இடங்களில் விஷ்ணுபரத்துவம் புலப்படப் பாடியிருப் பதியல்பே. ஆனால் இராமாயணத்திற் சிவனையும் பெருமைப்படக் குறித்திருக்கின்றார். இராமாயண நூன்முகத்தில் நம்மாழ்வார் துதி பாடியிருக்கின்றார். ஆனால், அச்செய்யுளிலுள்ள ''குருகைநாதன்'' என்ற தொடர்மொழி, திருக்குருகைப் பிரானான நம்மாழ்வாரென்று பொருள்படுவதோடு, நீண்டதுதிக்கை (குரு. நீண்ட; கை. துதிக்கை)யையுடைய கணேசன் என்றும் பொருள் படுமாகையால் அச்செய்யுளால், கணபதி துதிபாடினார் என்றும் நினைக்கலாம். ஏரெழுபதில் விநாயக வணக்கம் வைத்திருப்பதும் இங்கு நினைக்கற்பாலது. கம்பர் வைணவரே என்று ரூபிக்கச் சடகோபரந் தாதியிலிருந்து பின்வருஞ் செய்யுளைச் சிலர் எடுத்துக்காட்டுவர்.

> ''துறவா தவர்க்குத் துறந்தவர்க் குஞ்சொல்ல வேசுரக்கும்
> அறவா விவையிங்கொ ராயிரம் நிற்கவந் தோசிலர்போய்
> மறவா தியர்சொன்ன வாசக மாமலட் டாவைப்பற்றிக்
> கறவாக் கிடப்பரங் கென்பெற வோதங்கள் கைவலிப்பே''

இக்கவி கம்பர் பாடியதேயானால், கம்பர் வைணவசித்தாந்தத்தை முற்றும் பற்றியவரென்று கூறலாம். சைவப்பற்றுடையார் ஒருவருமே

இம்மாதிரி மாணிக்கவாசகரையும் அவரருளிச் செய்த திருவாசகத்தை யும் நிந்தியார். ஆனால் இராமாயணம் பாடிய கம்பர் சிவநிந்தையை யும் தாம் பாடுங் கவியிற் புகுத்திப் பாடுவாரோவென்று பெரியோர் ஆலோசிக்க வேண்டும். சடகோபரந்தாதி கம்பர் செய்த தென்று கொள்ளினும், மேல் வரைந்த செய்யுள் கம்பர் கிருதமாயிருக்க முடியாதென்றே நான் நினைக்கிறேன். கம்பர் மகன் பெயர் அம்பிகாபதி. சைவத்துவேஷ முடையாராய்க் கம்பர் இருநதிருப்பாரேல், மகனுக் கிப்பெயர் கொடுப்பாரோ? ''யாரினும் உயர்ந்த மூலத் தொருவரா மிருவர்'' என்று பரசுராமர் இருமூர்த்திகளையும் சமமாகக் கூறியதும் கவனிக்க. அன்றியும், சீதாபிராட்டியார்,

''செங்கண்மால் நான்முகன் சிவனென் றேகொலோ
எங்கள் நாயகனையும் நினைந்தது''

என்று சொல்லியதுங் கவனிக்க. சைவ வைணவ சமயங்களை ஏற்றத் தாழ்வில்லாதனவாக நம் கவிச்சக்ரவர்த்தி கருதினரென்பதைத் துலக்க,

''அரனதிகன் உலகளந்த அரியதிக னென்றுரைக்கும்
அறிவில்லோர்க்குப்
பரகதிசென் றடைவரிய பரிசேபோல்''

என்று கிட்கிந்தாகண்டத்தில் வருவதை யிலக்காகச் சிலர் கூறுவர். அரன்றான் அதிகனென்றோ அரிதா னதிகனென்றோ கொள்ளும் துவேஷிகள் பரகதியடைவது இயலாது என்பது இதன் வெளிப் படைப் பொருள்.

இதற்கு வைணவபரமாகப் பொருளுரைப்பாரு முளர். சிவன் பிரமனிடமிருந்து தோன்றினான்; பிரமன் நாராயணனிடமிருந்து தோன்றினான் என்பது வைணவக்கோட்பாடு அதற் கிணங்கச் சிலர் இதன் பொருள் பின்வருமாறு கூறுவர். சிவபிரானும் அவர்க்கு மேம் பட்ட பிரமனும் ஆகிய இருவர்களது உலகங்களாகிய கைலாயத் தையும் சத்திய லோகத்தையும் தமது விராட்ஸொரூபத்தினால் அளந்த விஷ்ணு மேம்பட்டவரென்று சொல்லு மறிவு யாருக்கில் லையோ அவர்க்குப் பரகதியடையுந்தன்மை அருமையாம்.

சிவபரமாகவும் இச் செய்யுளடிகட்குப் பொருளுரைக்கலாம். அதாவது: சிவனே மேம்பட்டவர். அவ்வாறாக, உலகளந்த அரி மேம் பட்டவரென்று சொல்வோர் அறிவில்லாதவர். அவ் வறிவிலிகட்கு மோக்ஷமடையுந்தன்மை அருமையாம்.

இருமூர்த்திகளும் சமமானவரென்று தாபித்தும் ஒருரையெழுத லாம். இருவரும் ஒருபரம்பொருளின் அம்சராதலால் சமமானவர் தாம் என்ற அறிவில்லாமல் அரனதிகன், உலகளந்த அரியதிகன் என்று பேதப்பட வாதுரைக்கும் அறிவிலிகள் மோக்ஷஞ்சேருதல் அருமை.

இவ்வாறு பலவிதமான அர்த்தமேற்படக்கூடிய அடிகளிலிருந்து கம்பர் சமயக் கோட்பாடு இன்னதென்று கூறமுடியாது. கம்பர்வழிபடு கடவுளாகக்கொண்டது சமயாதீதமுழுமுதலாம் பரமனையே என்று கூறுவோர்,

''உலகம்யாவையுந் தாமுளவாக்கலும், நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா,
அலகிலா விளையாட்டுடையாரவர், தலைவரன்னவர்க்கே சரணாங்களே''

என்னும் இராமாயணச் சிறப்புப்பாயிரச் செய்யுளைச் சான்றாகக் காட்டுவர். ஆக்கல் அளித்தல் அழித்தல் என்னும் முத்தொழில் களையும் தந் திருவிளையாட்டாகக் கொண்ட முழுமுதற்கடவுளே நாம் பணியுந்தெய்வம் என்று கம்பர் இங்குக் கூறினார். சைவம் வைணவ மென்ற பேதம் பாராட்டாமல் நடுநிலையுடையராய்ப் பாரபட்சமில்லாத பெரியோர்களிலொருவர் கம்பர் என்பதே என் துணிவு. ஆயினும், ''உலகம்யாவையும்'' என்னும் பாயிரத்தை இராமாயணத்தில் ஆங்காங்குக் காணும் வேறுசில செய்யுட்களுடன் ஒப்புநோக்குங்கால், கம்பருக்கு வைணவப்பற்றே அந்தரங்கமானபற்றென்று தோன்று கின்றது. சுந்தரகாண்டத்தில்,

''மூலமும்நடுவு மீறுமில்லதோர் மும்மைத்தாய
காலமுங்கணக்கு நீத்தகாரணன் கைவிலேந்திச்
சூலமுந்திகிரி சங்குங்கரகமுந் துறந்துதொல்லை
யாலமுமலரும் வெள்ளிப்பொருப்பும் விட்டயோத்திவந்தான்''

என்று ஸ்ரீராமபிரானைச் சிறப்பித்துப் பாடியிருக்கிறார். பாலகாண்டம் திருஅவதாரப்படலத்தில் ''முப்பரம் பொருளுக்கு முதல்வன'' என்றும், கடிமணப்படலத்தின் ''முப்பரம் பெரருளிற்குண் முதலை மூலத்தை'' என்றும் ஆரண்யகாண்டத்திற் சடாயுவதைப்படலத்தில்,

''முத்தேவரின்மூல முதற்பொருளாம்
அத்தேவரிம் மானிடாதலினால்''

என்றும் இராமபிரானை வருணித்திருப்பது கவனிக்கத்தக்கது.

இராமாயணத்தின் மேன்மையை விரிவாயுரைக்க இப்பொழுது சமயம் போதாதாகையால், கல்விபயிலும் மாணவர்கட்குக் கல்வியின் மகிமையையும் அதன்பலனையும் நோக்கத்தையும் நன்கு விளக்குமோர்செய்யுளை மாத்திரம் இங்குக் கூறுகிறேன். அது பாலகாண்டம் நகரப்படலத்திலுள்ளது. அதுவருமாறு :

''ஏகம்முதற் கல்விமுளைத் தெழுந்தெண்ணில்கேள்வி
ஆகம்முதற்றிண் பணைபோக்கிய ருந்தவத்தின்
சாகந்தழைத் தன்பரும்பித் தருமம்மலர்ந்து
போகங்கனி யொன்றுபழுத்தது போலுமன்றே''

கல்வியென்னுமொருவித்து முளைத்தெழுந்து, எண்ணற்ற கேள்விகளாகிற கிளைகளை யெங்கும் பரவச்செய்து, புண்ணியகாரியங்களாகிற இலைகளைத் தழைத்து, அன்பாகிற அரும்புகளரும்பிப் பலவகைத் தருமங்களாகிற மலர்கள்மலர்ந்து, நித்தியாநந்தசுகாநுபவமாகிற கனியொன்றைப்பழுத்த விருக்ஷத்தைப் போலும் என்பது இச்செய்யுளின் பொருள் இப்பாட்டின் வனப்பையும் மேன்மையையும் அதுபுகட்டும் அறிவையும் நன்குணர்ந்து கற்றவர் வாழ்வின்பலன் பிறஜீவர்மாட்டு அன்புபாராட்டி அறச்செயல்களைச்செய்து அவற்றின் வாயிலாக நித்தியாநந்தம் நாடுதல் என்றறிந்து, நீங்கள் யாவரும் மேம்பாடடைய ஈசன்திருவருள் சுரக்குமாக!

இக்கட்டுரை செந்தமிழ்த் தொகுதி 25, பகுதி 10-இல் 1927-ஆம் ஆண்டு வெளிவந்தது.

இலக்கண ஈடுபாட்டில் வையாபுரிப்பிள்ளை

—முனைவர் சா. கிருட்டிணமூர்த்தி

மொழியும் இலக்கண ஈடுபாடும்

மொழிச்சீர்மையை அறிந்து கொள்ள இலக்கண ஈடுபாடு ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாது தேவைப்படுவதாகும். தமிழுக்கு அருந்தொண்டாற்றிய அரும்பேராளர் அனைவரும் இலக்கணப் புலமையும் ஈடுபாடும் கொண்டவர்களாக இருந்தனர். இவ்வீடுபாடு தம் மொழியின் நிலை பேற்றினை அறிந்து கொள்ளவும் பிறவற்றி னின்றும் அதனை வேறுபடுத்தி உலகுக்குணர்த்தவும் அவர்களுக்கு உறுதுணையாய் இருந்தது. இதனால் மொழித் தொன்மை, அம் மொழி வழி இலக்கியங்களின் இருப்புநிலை, பொருள்நிலை போன்ற வற்றில் கருத்து வேறுபாடுகள் அறிஞர்களிடையே நிலவத் தலைப் பட்டன. இவ்வேறுபாடுகள் மொழி இலக்கியம் பற்றிய உள்ளார்ந்த கூறுகளை வெளிப்படுத்தும் ஆய்வுக் கூறுகளாகவே வெளிப்பட்டன. இச்சூழல் தமிழில் ஆய்வு நெறி வளர ஏதுவாய் அமைந்தது. தமிழில் ஆய்வியல் வளர்ச்சிக்கு வித்திட்ட பெரியார்களுள் வையாபுரிப்பிள்ளை குறிப்பிடத்தக்கவராவார். ''தமிழ் மொழி பற்றியும் தமிழ் இலக்கியம் பற்றியும் ஆராய்வதே நான் இளமை தொட்டுச் செய்துவந்த செயல்'' (காவியகாலம், முன்னுரை) என்று கூறுவதன் மூலம் அவர்தம் ஆய்வு உள்ளுணர்வு வெளிப்படும். தமிழில் பன்முனை ஆய்வுகளைக் கொண்ட பிள்ளையவர்களுக்கு இருந்த இலக்கண ஈடுபாடு அவர்தம் ஆய்வுகளுக்கு உரமூட்டுவதாகவும் உறுதியூட்டுவதாகவும் அமைந்தது. இவ்வீடுபாட்டை ஒருசேரக் காணும் வகையில் இலக்கணம் பற்றிய அவர்தம் ஆய்வுக்கட்டுரைகளைத் தொகுத்து 'இலக்கணச் சிந்தனை கள்' என்னும் நூலை வெளியிட்டுள்ளனர்.

இலக்கணச் சிந்தனைகள்-நூல்

இந்நூல் பாரி நிலையத்தாரால் 1956இல் முதற்பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. 1. பாணினீயம் 2. வடமொழியும் தமிழும், 3. தொல்காப்பியரும் மொழிவளர்ச்சியும், 4. சிலப்பதிகாரத்தில் சில

இலக்கண வழக்குகள், 5. அண்மைவிளி, 6. உறுப்புச் செய்யுள், 7. திராவிட மொழி ஆராய்ச்சி, 8. பலவகை இலக்கணங்களின் அவசியம், 9. வரலாற்று இலக்கணம், 10. தத்துவ சாத்திரமும் இலக்கணமும் ஆகிய பத்துக்கட்டுரைகள் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன. இக்கட்டுரைகளுள் பலவும் **செந்தமிழ்** இதழில் வெளி வந்தவை.

பிற இலக்கணச் செய்திகள்

இவையன்றியும் பிள்ளையவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் பல வற்றுள்ளும் அரிய பல இலக்கணச் செய்திகள் பொதிந்து கிடக் கின்றன. சொல்லாராய்ச்சியிலும், நூல்களின் காலவாராய்ச்சியிலும், இலக்கிய மதிப்பீட்டாராய்ச்சியிலும் இவ்விலக்கணச் செய்திகள் படர்ந்து கிடக்கின்றன மேற்கண்ட இலக்கண ஈடுபாட்டை,

1. வடமொழியும் தமிழும்,
2. தொல்காப்பியக் கூறுகள்,
3. சொல்லாராய்ச்சி நிலை,
4. புதிய இலக்கணத் தேவை;
5. இலக்கணக் கொள்கைகளும் மொழியியற் கூறுகளும்

ஆகிய நிலைகளில் பகுத்துக் காணலாம்.

1. வடமொழியும் தமிழும்

இவ்விரு மொழிகள் பற்றிய ஆழ்ந்த எண்ணங்களை பிள்ளைய வர்கள் வெளிப்படுத்தியுள்ளார். இருமொழிப் புலமைமிகுந்த இவர், அடிப்படைக் கூறுகளை எடுத்துக்காட்டி இவற்றின் சிறப்பியல்புகளை எடுத்தியம்புகின்றார். ''எனது தாய்மொழியின் புகழ் உலகெங்கும் பரவவேண்டுமென்ற ஆசை மிகவுடையேன். எனது தாய்மொழியில் அளவற்ற நூல்கள் இயற்றப்பட்டு அவை கடல்போல் பெருக வேண்டு மென்ற விருப்பம் மிகவுடையேன்'' (இலக்.சிந்., ப. 21) என்று தன் விருப்பத்தை வெளிப்படுத்துகின்றார்.

ஒரு மொழியின் இலக்கியத் தோற்றத்தின் கால எல்லைக் கணிப்பு அம்மொழியின் தொன்மையையும் சிறப்பையும் எடுத்தியம்ப வல்லது. தெலுங்கு கன்னடம் மலையாளம் போன்றவற்றின் இலக்கியத் தோற்றம் மிகப் பிற்காலத்ததாகும். இவற்றை நோக்கத் தமிழ்மொழி தனிச்சிறப்பு வாய்ந்ததாக விளங்குகின்றது. அன்றியும் அவ்விலக்கி யங்கள் வடநூல் மரபை அடியொற்றி எழுந்தன. ஆனால் தமிழ்

தனக்கே உரிய யாப்பு நிலையைக் கொண்டு விளங்குகின்றது. இத்தகு தமிழ் மொழிக்குத் தாய்மொழி வடமொழி என்று கூறுவார் கூற்றை மறுத்துரைக்கின்றார்.

1. தமிழிலுள்ள சொற்கள்
2. தமிழ் நூல் விஷயம்
3. தமிழிலக்கிய மரபு

என்னும் மூன்று நிலைகளில் தமிழுக்குச் செவிலித்தாய் வடமொழியாகும் என்று நிறுவுகின்றார். ''தமிழ் மொழிக்குச் செவிலித்தாய் என வடமொழியைக் கூறுதலே பொருந்துவதாகும்'' என்பது அவர்தம் கூற்றாம் (இலக்.சித்.,ப.1). தமிழில் செய்யுளீட்டச் சொற்கள் குறிக்கப்படும்பொழுது வடசொல்லும் குறிக்கப்படுகின்றது (தொல். சொல்.391) வடமொழியில் நாற்பொருள் பாகுபாடு சதுர்வர்க்கம் எனக் குறிக்கப்படுகின்றது. 'சதுர்வர்க்க பலம் ஜ்ஞானம்' என்பது ரகுவம்சம். தமிழிலும் 'அறம்பொருள் இன்பம் வீடு அடைதல்' என்று சுட்டப்பட்டுள்ளது. இவை போன்ற பல சான்றுகளைத் தந்து தமிழுக்குச் செவிலித்தாய் வடமொழி என்று கூறுகின்றார். ''தமிழின் முழுமுதல் தன்மையை யான் மறுத்ததுமில்லை; வடமொழி தமிழுக்குத் தாய்மொழி என்பதில் யான் உடன்பட்டதுமில்லை; (இலக்.சிந்., ப 22) என்பதால் இருமொழிகள் பற்றிய அவர்தம் உள்ளுணர்வு நன்கு புலப்படுகின்றது.

2. தொல்காப்பியக் கூறுகள்

தொல்காப்பியம் பற்றிய இவர்தம் சிந்தனைகள் இந்நூலின் பால் இவருக்கிருந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றன. வடமொழியிலக்கணமாகிய அஷ்டாத்யாயீயில் உள்ள இலக்கணக் கூறுகள் தொல்காப்பியத்துள் காணப்படுகின்றன. நாலாயிரம் சூத்திரங்களைக் கொண்டு எட்டு அத்தியாயங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது அந்நூல். அக்ஷரஸமாம் நாயம், ஸிக்ஷை, கணபாடம், தாதுபாடம், லிங்காநுஸாஸநம் என ஐந்து அங்கங்களைக் கொண்டு அமைந்துள்ளது. இதனுள் ஸிக்ஷை என்னும் எழுத்து உச்சாரண முறை எழுத்துகளின் பிறப்பைக் கூறுவதாகும். இதனுள், 'அஷ்டௌ ஸ்தாநாநி வர்ணாநாம் உர; கண்ட: ஸிர: ததா—ஜிஹ்வாமூலம் ச தந்தாஸ்சநாஸி கோஷ்டௌ ச தாலு ச' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கொப்பத், ''தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ' எனத் தொல்காப்பியர் (எழுத்து. 83) சூத்திரம் செய்தார் என்பர்.

மெய்ம்மயக்கமும் மொழிக் கலப்பும்

ஓர் ஒலி பிறிதொன்றனோடு இயைந்து நிற்கும் நிலை மெய்ம் மயக்கம் எனப்படும். இது தொல்காப்பியத்துள் நுட்பந் தோன்றக் கூறப்பட்டு உள்ளது இவ்வொலிக் கண நுட்ப இயல்பு பிற மொழி களில் இல்லை. மெய்ம்மயக்கம், உடனிலை முதலியவற்றை வட நூலார் ஆராயவில்லை; பாணினியிலும் கூறப்படவில்லை; தொல் காப்பியமே முதன் முதல் எடுத்துரைக்கின்றது (இலக்.சிந்.,ப.57).

தொல்காப்பியத்துள் பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளன. 25 பாகதச் சொற்களும் (அரசர் அரணம் அவை முதலியன) 47 வட மொழிச் சொற்களும் (அந்தம், அந்தரம் அப்போதரங்கம் முதலியன) விரவி உள்ளன என்று பட்டியலிட்டுரைத்துள்ளார். (இலக்.சிந்.,ப.67)

வடமொழிச் சங்கேதச் சொற்களை மொழிபெயர்த்தும் மொழி பெயர்க்காதும் அமைத்துக் கொண்டதோடு அப்பதங்களின் இலட்ச ணங்களை மொழி பெயர்த்தும் தம் நூலுள் தொல்காப்பியர் ஆண்டுள் ளார். காட்டாக,

लौकिकम	– உலகவழக்கு
योग्यता	– தகுதி
देश्यम	– திசைச்சொல்
समासम	– தொகை

போன்ற சங்கேதபதங்களின் மொழி பெயர்ப்பையும் அதிகாரம் (பொருள் : 652), உத்தி (பொருள். 640, 652) என மொழி பெயர்க்காது அமைந்ததையும் காணலாம்.

மாத்திரை எனும் சொல்விளக்கம்

தொல்காப்பியத்துள் மாத்திரைக்குக் கூறும் விளக்கமாகிய 'கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை நுண்ணிதின் உணர்ந் தோர் கண்டவாறே' (எழுத்து.7) என்பது வடமொழிச் சுலோகப்பகுதி இரண்டின் பொருளைச் சுருங்க உரைப்பதாகும்.

நிமே ஷோந் மேஷ காலநே
ஸமாம் மாத்ராது ஸம்ஸ்ம்ருதா:
அங்குலீ ஸ்போடனம் யாவத் காலே
மாத்ரேதி ஸோச்யதே

இத்தகு சங்கேதங்களை நூலில் அமைத்ததன் நோக்கம் பொதுவான வற்றை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும் என்பதாகும் இவை ஒப்புநோக்கிற்கு இன்றியமையாததோடு இலக்கணப் பொதுநூல் வேண்டுமென்ற உணர்வு தொல்காப்பியருக்கிருந்தது என்பதையே சுட்டுகின்றது (இலக்.சிந்.,ப.71)

3. சொல்லாராய்ச்சி நிலை

மொழி ஆய்வில் சொல்லாராய்ச்சி அடிப்படையான ஒன்று. படைப்புகளின் கால நிலையை உறுதி செய்வதற்கும் மொழிவளத்தை அறிந்துகொள்வதற்கும் இச்சொல்லாராய்ச்சி பயன்படுவதாகும். சொல் லாராய்ச்சி இடம்பெறாத ஆய்வுக்கட்டுரையே இல்லையெனும் அளவிற்கு அனைத்துக் கட்டுரைகளும் விளங்குகின்றன. சொல்லா ராய்ச்சி பிள்ளையவர்களுக்குச் சிறப்புக்குரியதாகக் காணப்படுகின்றது.

தொல்காப்பியம், சங்க நூல்கள், திருக்குறள், சிலப்பதிகாரம் போன்றவற்றுள் அவர் மேற்கொண்டுள்ள சொல்லாய்வுகள் குறிப் பிடத்தக்கன வடமொழி, பாகதச் சொற்கள் தொல்காப்பியத்தில் பயின்று வந்துள்ள நிலையைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். 'சிலப்பதிகாரத்தில் சில இலக்கண வழக்குகள்' என்னும் கட்டுரையில் நீர், யாங்கள், நான், இந்த முதலிய சொற்களின் ஆட்சிபற்றி ஆய்ந்துரைத்துள்ளார்.

நீர் என்ற முன்னிலைச் சொல் தொல்காப்பியத்துள் பயில வில்லை (சொல் 174,188). நன்னூலார், முன்னிலை எல்லீர் நீயிர், நீவிர் நீர் நீ (பெய. 28) எனக் குறிக்கின்றார். சங்க இலக்கியங்களுள் யாண்டும் 'நீர்' என்னும் முன்னிலைப் பெயர் பயின்றுவரவில்லை. சிலப்பதிகாரத்தில் 'அடிகணீரே' (பதிகம். 62,10-62) 'கூடற் காவதம் கூறுமின் நீர்' (13,114) என இச்சொல் பயின்று வந்துள்ளது. இத்தகு சான்றுகளை எடுத்துக்காட்டிச் சிலப்பதிகாரத்தின் காலத்தை சொல்லாராய்ச்சி அடிப்படையில் வரையறுத்துக் கூறுகின்றார். இது போன்று பிறசொல் நிலைகளையும் சான்றாகக் காணலாம்.

சொல்வரலாறு நிர்ணயித்தல்

சொல்லாய்வு செய்யும் பொழுது தொடர்புடைய பிறமொழி களினின்றும் சொல்மூலங்களைக் காண்டுணரவேண்டும். இவற்றிற் கிடையே உள்ள சொற் பொருள் தொடர்புகளை அறிந்து மூலச் சொற்களை அறியவேண்டும் என்னும் பேரவா அவருக்கிருந்தது.

இதனை அவர்தம் தமிழ்ப் பேரகராதியில் மேற்கொண்டுள்ளார் என்பதையும் காண முடிகின்றது இதனைத் ''தமிழ்ச்சொற்களைத் தெரிந்தெடுத்து அவற்றோடு ஒத்த தெலுங்குச் சொல் கன்னடச் சொல் முதலியவற்றையும் கண்டு மூலச்சொல் எது என்பதை முடிவு கட்டிச் சொல்வரலாற்றை நிர்ணயித்தல் வேண்டும்'' (இலக் சிந், ப.124) என்ற அவர்தம் கூற்றால் அறியலாம்.

சொல்வரலாற்றை அறிந்து கூறும் நிலையோடு சொற்களுக்குரிய மூலங்களைக் காட்டும் தெளிந்த நூலொன்றும் வரவேண்டும். ''தமிழ்ச் சொற்கள் அனைத்திற்கும் சொல்லாக்கம் காட்டும் நூலொன்று தக்க ஆராய்ச்சியின் பயனாக வெளிவருமாயின் அப்பொழுது பிறமொழி மக்களால் தமிழ் அடைந்துள்ள வளத்தினை அறிதல் கூடும்'' (இலக்.சிந் ,42) என்பது பிள்ளையவர்களின் உட்கருத்தாகும்.

4. புதிய இலக்கணத் தேவை

ஒரு காலத்தில் மொழிக் கூறுகள் அடுத்த காலத்தேவைக்கு ஏற்றனவாக அமையும் என்று கூறவியலாது. மொழிக் கட்டமைப்பும் மொழி சார்ந்த இலக்கிய மரபுகளும் காலத்திற்கேற்ப மாறுந்தன்மையுடையன; வளரும் தன்மையுடையன. எனவே காலத்திற்கேற்ற இலக்கணம் இயற்றப்படுதல் இன்றியமையாததாகும். தொல்காப்பியம் தொடங்கிச் சரவணத் தமிழனின் தமிழ் நூல் ஈறாக எழுந்த நூல்களனைத்தும் காலத்தின் தேவை கருதியவையே.

இலக்கணம் என்பது 'ஆசிரியன் வாழ்ந்த காலத்திற்கும் அதற்கு முன்பும் உள்ள மொழி வழக்கு அனைத்தையும் வகைப்படுத்திக் கூறமுயல்வது' என்பர் (இலக்.சிந், ப.117). காலத்திற்குக்காலம் நூல்கள் அதிகப்பட்டு வருவதோடு மொழி வளர்ச்சியும் வேறுபடுதல் கூடும். இவ்விருவகைக் கூற்றினையும் உட்படுத்தி அப்போதைக்கப்போது இலக்கணம் புதிதாக இயற்றப் பெறல் வேண்டும். இத்தகையதொரு இலக்கணம் இன்னும் இயற்றப் பெறவில்லை என்பது பிள்ளையவர்களின் கருத்தாகும் (இலக்.சிந்;ப.1881, 119).

கால முறை இலக்கணம்

வரலாற்று முறையிலான இலக்கணம் இயற்றப்பட வேண்டுமென்பதைப் பிள்ளையவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளார். அனைத்து

இலக்கியங்களையும் திரிபறக் கற்று அவற்றைச் சங்ககாலம், பக்தி நூற்காலம், நீதி நூற் காலம், காப்பிய காலம் எனப் பல பகுதிகளாகப் பிரித்து அவ்வக் காலத்திற்குரிய இலக்கணமாக இலக்காலம் வரை இயற்றுதல் மிகமிக இன்றியமையாததாகும். இதனால் அவ்வக் காலத்திற்குரிய மொழியின் அழிவழக்குகளையும், நிலை வழக்கு களையும் உய்த்துணர ஏதுவாகும்.

பேச்சு மொழி இலக்கணம்

இலக்கிய வழக்கிற்கு மட்டுமன்றிப் பேச்சு வழக்கிற்கு இலக் கணம் படைப்பதும இன்றியமையாததாகும். ''தற்காலத்தில் எத்தனையோ புதிய வழக்கு நாம் பேசிவரும் பேச்சுக்களிலும் பத் திரிகைகளிலும் நூல்களிலும் வழங்கிவரும் மரபுகளைத் தொகுத்துக் கொடுத்து இலக்கணம வரைதல் அவசியம் அல்லவா?'' (இலக்.சிந்., ப.119) என்று நம் அவாவை வெளிப்படுத்துகின்றார்.

இவ்வாறு செய்யப்படும் இலக்கணம் தமிழில் எழுதப்பட வேண்டும். 'தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு எழுதப்படும் இலக்கணம் தான் மிகச் சிறந்ததாக இருக்கும்'' என்று கூறு கின்றார். இத்தகு இலக்கணம் தமிழோடு தொடர்புடைய கன்னடம், தெலுங்கு மலையாளம் முதலியவற்றோடு ஒப்பு நோக்கிச் செய்யப் பெறுதல் வேண்டும். ஆனால் அவற்றிற்குரிய இயல்பைத் தமிழ் இலக்கணத்தில் ஏற்றிக் கூறுதல் கூடாது. பிற இலக்கணம் வளர்ந்து வந்திருக்கும் முறையை அறிந்து அவற்றிலுள்ள கொள்கைகளுள் கொள்ளத் தக்கனவற்றையும் தள்ளத்தக்கனவற்றையும் வரையறை செய்து கொள்ளுதல் வேண்டும் (இலக்.சிந்.,ப.119, 120). இவ்வாறு செய்யப் பெறும் இலக்கணமே மொழிப் பயன்பாட்டிற்கும் மொழி வளர்ச்சிக்கும் துணை புரிவதாக அமையும்.

5. இலக்கணக் கொள்கைகளும் மொழியியற் கூறுகளும்

பிள்ளையவர்களுக்கு இருந்த இலக்கண ஈடுபாடு, மொழியின் பல நிலை நிறைகுறைகளைச் சுட்டிக் காட்டுவதோடன்றி இலக்கணக் கொள்கைகள் பலவற்றை வரையறுத்துக் காண்பதற்கும் உறுதுணை யாய் அமைந்தது.

இலக்கிய மரபு என்பது மாறும் தன்மையுடையது. காலத்திற் கேற்ப யாப்பு வடிவங்களும் பொருண்மைகளும் மாறுதல் அடையும்.

யாப்புக் கொள்கைகள் அவ்வக்காலத்திய சிந்தனைகளுக்கேற்ப வேறு வடிவம் பெறும். கால, சமூக, பொருளாதாரக் கூறுகள் அதற்குரிய காரணிகளாக அமையலாம். பாரதியார் பாடல்கள் பண்டைய யாப்புக் கொள்கையைக் கொண்டு விளங்கின. ''மாறிக் கொண்டே செல்வது தான் உலக இயல்பு. இலக்கிய மரபும் மாறத்தான் செய்யும்... கண்ணன் பாட்டு முதலியவற்றிற் போன்று சிந்து வகைகளில் பாடும் மரபு தோன்றிவிட்டது'' என்று கூறுகின்றார். (இலக். சிந்., ப.1,79-80)

உவமை

உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும் (தொல்.பொருள், 283) என்பது தொல்காப்பியம். இதனால் அவ்வுவமை சிறந்து இன்பம்தரும். ஒரு பொருளுக்குக் கூறப்படும் உவமானங்களுள்ளும ஓர் ஒற்றுமை அமைந்திருக்க வேண்டும். இவ்வொற்றுமையையும் தகுதிப்பாட்டையும் பிள்ளையவர்கள் மிகத் திறம்பட வரையறுத்துக் காட்டுகின்றார். ''உவமானம் உவமேயத்திற்குத் தகுதியுடையதாக இருத்தல் வேண்டும். ஒரு பொருளுக்குப் பல உவமானங்கள் கையாளப்படுமாயின் அவற்றுள் ஒவ்வொன்றும் அப்பொருளுக்குப் பொருந்தி யிருத்தலோடு அவைகள் தம்மினும் ஒரு தகுதிச் சேர்க்கை இருத்தல் வேண்டும். அன்றியும் காவியத்தில் மற்ற இடத்தில் அமைந்துகிடக்கும் அப்பொருளின் இயல்புடன் உவமானம் பொருத்தமாதல் வேண்டும் (இலக் சிந்.,ப.1-98) என்ற அவர்தம் உவமைக் கொள்கை ஆய்ந்து காணத் தக்கதாகும். இது போன்ற பல இலக்கணக் கொள்கைகள் பிள்ளையவர்களின் ஆய்வுப் படைப்புகளில் நிரம்பக் காணப்படுகின்றன.

மொழியியற் கூறுகள்

ஒவ்வொரு அறிஞர்க்கும் மொழியியல் அறிவு இன்றியமையாதது என்று சுட்டுகின்றார். ''திராவிட மொழிகளின் தத்துவங்களை ஆராய்ந்துணர்த்த வேண்டுவது தமிழாராய்ச்சித் துறையில் உழைத்து வருவோர்க்குரிய பெருங் கடமைகளுள் ஒன்றாகும்'' (இலக்.சிந்தனைகள்,ப 100). கால்டுவெல் சேஷகிரி சாஸ்திரியார் (ஆரிய திராவிட மொழி யாராய்ச்சிக் குறிப்புகள், 1884). ஸ்ரீ ஸி. நாராயணராவ் ரெவரண்டு ஞானப்பிரகாசர் முதலிய பேரறிஞர்கள் திராவிட மொழி ஆராய்ச்சிக்கு அருந்தொண்டாற்றியவர்கள் ஆவர். இவர்களின் அடிப்படையில் திராவிட மொழி ஆராய்ச்சியால் இப்போதிருக்கும் மொழிநிலையை நன்கு தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

மொழியாய்வு

ஒலி, சொல், சொற்பொருள், வாக்கிய அமைதி, வரலாறு, பிராந்திய மொழி ஆகிய படிநிலைகளில் மொழி ஆராய்ச்சி மேற்கொள்ளப் பெற வேண்டும் என்று கூறியுள்ளார். ஒவ்வொரு மொழியிலும் பற்பல காலங்களில் தோன்றிய இலக்கணங்களின் சரிதங்களையும் இலக்கணக் கொள்கைகளின் சரிதங்களையும் ஆராய்ச்சி செய்தல் வேண்டும். பிள்ளையவர்களுக்கு எவ்வளவிற்கு மொழியியல் ஆய்வில் ஈடுபாடு இருந்தது என்பதை அவர்தம் ஆய்வுக் கட்டுரைகளில் காணப் பெறும் மொழியியல் கலைச் சொற்களைக் கொண்டு தெளியலாம்.

1. சொல்லுற்பத்தி (Etymology)
2. ஒலியாராய்ச்சி (Phonology)
3. சொல்லுருப்பாராய்ச்சி (Morphology)
4. சொற்பொருளாராய்ச்சி (Semasiology)
5. வாக்கியயமைதியாராய்ச்சி (Syntax or structure of sentence)
6. மொழிச் சரிதம் (History of the language)
7. பிராந்திய மொழியாராய்ச்சி (அ) பிரதேசிக மொழி யாராய்ச்சி (Study of dialects)
8. பிராந்திய மொழி விவரண நூல் (Dialect Geography)
9. கிளைமொழி (Cognate language)
10. ஒப்புநோக்கு ஆராய்ச்சி (Comparative Philology)
11. மொழிப் பொது ஆராய்ச்சி (General linguistics)
12. வகுத்துரை இலக்கணம் (Descriptive grammar)
13. வரலாற்று நெறி இலக்கணம் (Historical grammar)
14. ஒப்புநோக்கு இலக்கணம் (Comparative grammar)
15. மொழித்தத்துவ இலக்கணம் (General or Philosophical grammar)
16. தொன்மொழி நாகரிக நூல் (linguistic Palaeontology)
17. தொல்லெழுத்தாராய்ச்சி (Palaeography)

மேற்கண்டவற்றுள் ஒவ்வொரு ஆய்வும் எவ்வெவ் வகையில் மேற்கொள்ளப் பெற வேண்டும் என்பதையும் பிள்ளையவர்கள் தெளிவுபடக் கூறுகின்றார்கள். சான்றாக மொழிப்பொது ஆராய்ச்சி (General linguistics) கீழ்க்கண்ட படிநிலைக் கொண்டு செய்யப்பெற வேண்டும் என்பர்.

1. மொழி எவ்வாறு பிறந்தது
2. மக்கள் பேச்சுக்குரிய ஒலிகள்
3. ஒலிப்பிறப்பு
4. சொல் பொருள் தொடர்பு
5. சொல் பொருள் பொதுநெறியில் எவ்வாறு மாறுபடுகின்றது
6. மக்களின் கருத்துலகிற்கும் மொழிக்கும் உள்ள தொடர்பு
7. பேசுதற்குமுன் நிகழும் மானசீக நிகழ்ச்சிகள்
8. மொழியாராய்ச்சி நூலுக்கும் பிற பிர கிருதி சாத்திரங் களுக்கும் உள்ள தொடர்பு
9. வரிவடிவ வரலாறு

இவ்வாறு பல்வேறு நிலைகளிலும் ஆய்வுப் போக்கிற்கேற்ப அவர்தம் இலக்கண ஈடுபாடு நன்கு புலப்படுகின்றது. ஆய்வுப் படைப்புகள் பலவற்றுள்ளும் ஊடாடிக்கிடக்கும் இவ்விலக்கண ஈடுபாடு பெரியதோர் ஆய்வுக்களத்திற்கு உட்பட வேண்டிய ஒன்றாகும்.

சுந்தரரும் மெய்கண்டாரும்

—டாக்டர் ஆ. ஆனந்தராசன்

ஏழாம் திருமுறையாகிய சுந்தரர் தேவாரம் சிவஞானபோத ஏழாம் நூற்பாவிற்கு எவ்வாறு அடி நிலமாக அமைந்தது என்பதை விளக்கிக் காட்டு முகமாகச் சுந்தரரையும் மெய்கண்டாரையும் இணைத்துக் காணும் முயற்சியே இக் கட்டுரை.

உயிர் அசத்தாகிய பாசத்தைச் சார்ந்து அசத்தாயும், சத்தாகிய பதியைச் சார்ந்து சத்தாயும் நிற்கும் இயல்பினது என்பதைச் சிவஞான போத ஏழாம் நூற்பா உணர்த்தும். 'இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா' எனப் பெத்தம், முத்தி என்னும் இரண்டினுக்கும் ஏற்பப் பொதுவகையாற் கூறினும், ஆன்மா பாசத்தோடு கூடி நிற்றல் செயற்கை என்பதும், சிவத்தோடு கூடி நிற்றலே இயற்கை என்பதும் அந் நூற்பாவின் அடி நிலைக் கருத்தாகும்.

சுந்தர மூர்த்தி சுவாமிகளின் திருப்பதிகங்களில் இவ்வடி நிலைக் கருத்துப் பெரிதும் விரவி நிற்றலைக் காணலாம். உலகச் சார்பின் நிலையின்மையை எடுத்தோதி அதனினின்றும் உய்யக் கொள்ளுதல் வேண்டும் என இறைவனை வேண்டும் முறையிலும், உலகத்தினது நிலையாமையையும் துன்ப நிலையையும் எடுத்துக் கூறி நெஞ்சிற்கு அறிவுறுத்துமுறையிலும், இன்ன பிற வகையிலும் அமைந்த அவர் பாடல்கள் பாசத்தோடு கூடி நிற்றல் செயற்கை என்பதை உணர்த்தி நிற்கின்றன.

நல்ல துணையாகிய இல்லாளை மணந்தார்; நன்றாக உண்டார்; உடுத்தார்; மூப்படைந்தார்; இறந்தார் என்று உலகத்தில் சொல்லப் படும் சொல்லையுடையவராய் யாவரும் நீங்குவதன்றி நில்லாமையை யறிந்து உன்னை யடைந்தேன். அடியேன் பிழைத்துப் போவதற் குரிய வழியைச் சொல்லியருள். (7 : 3 :

'வறிதே நிலையாத இம் மண்ணுலகின்
நரனாக வகுத்தனை; நானிலையேன்;
பொறி வாயில் இவ் வைந்தினையும்மவியப்
பொருதுன் னடியே புகும் சூழல் சொல்லே!
(7 : 3 ; 2)

'மணக் கோலமதே பிணக்கோலமதாம்
பிறவி யிதுதான்' (7 : 3 : 7)
'மத்த யானை யேறி மன்னர் சூடி வருவீர்காள்
செத்த போதில் ஆருமில்லை சிந்தையுள் வைம்மின்கள்'
(7 : 7 : 1)
'தந்தை யாரும் தவ்வையாரும் எட்டனைச் சார்வாகார்'
(7 : 7 : 9)
'தோற்ற முண்டேல் மரணமுண்டு; துயர
மனை வாழ்க்கை' (7 : 7 : 2)
'சுவையிலாப் பேதை வாழ்வு' (7 : 8 : 4)
'மானுட வாழ்க்கை ஒன்றாகக் கருதிடில்
கண்கள் நீர் மல்கும்' (7 : 15 :8)

இவ்வாறு, பாசத்தோடு கூடி நிற்றலால் உளதாகும் துன்ப நிலையைப் பலபட உரைப்பதோடு சிவமொன்றே மெய்ச் சார்பாவது என்பதையும் அவர் தெரித்துரைக்கின்றார்.

'உறவிலேன் உனையன்றி மற்றடியேன்' (7: 70: 6)
'தாளே வந்தடைந்தேன் தலைவா எனை ஏன்று கொள் நீ'
(7: 24: 2)
'எனக்கு ஆர்துணை நீயலதே' (7: 28: 1)
'விரும்பேன் உன்னையல்லால் ஒரு தெய்வம்' (7: 23: 4)

உயிர் என்னும் சிவத்திற்கு அடிமையாகி நிற்றலைச் சுந்தரர் வாழ்வும் வாக்கும் தெளிய உணர்த்தி நிற்கின்றன. 'அடியேன் உனக்கு முன்பே ஆளாகி இப்பொழுது அடினல்லேன் என எதிர் வழக்குப் பேசியது தகுமோ?' என்று சுந்தரர் இரங்கிக் கூறுவதும், 'ஒருமையே அல்லேன் எழுமையும் அடியேன்' (7: 14: 11) என்று கூறுவதும், மீளா அடிமை (7: 95: 1) என்பதும் அவர்தம் அடிமைத் திறத்தினை உணர்த்துவனவாகும்.

சுந்தரர் வழியே தெளிந்த இவ்வுண்மையை-அடிமை என்றும் அடிமையே என்னும் இவ்வுறவு நிலையை மெய்கண்டார் உயிரியல்பு கூறும் ஏழாம் நூற்பா முதலாக இறுதி நூற்பா வரை சிறப்பு நிலையில் அமைத்துக் காட்டியுள்ளார் என்பதனை நூலை நுணுகிக் கற்றோர் நன்கு உணர்வர். உயிர் பெத்தத்தில் அசத்தாகிய கருவிகளின்வழி திரோதான சத்தி அறிவிக்க அறியும். முத்தியில் சத்தாகிய அருட் சத்தி தானே நேரே அறிவிக்க அறியும். இது பற்றியே உயிரறிவை 'உபதேசியாய் நின்ற அவ்வறிவு' என ஏழாம் நூற்பாவின் வார்த்தி கத்தில் மெய்கண்டார் குறிப்பர். இறுதி நூற்பாவின் இறுதி வெண் பாவில், 'குருடாய்க் கிடந்த உயிர்க்கு ஞானக் கண்ணைக் கொடுத்துத் தன்னை உணரும்படி செய்து அவ்வுயிரைத் தானாம் வண்ணம் செய்தானாயினும், உயிர் இதுகாறும் அவனை யின்றி யமையாதது போல இனியும் அவனை யின்றி யமையாது ஆகலான் அவனுக்கு அஃது என்றும் அடிமையேயாம்' என்று முடித்துக் காட்டுவார்.

இனி, அசத்தாகிய கரணம் அறிவற்றது ஆகலின் அது சத்தாகிய சிவத்தை யறியாது என்பது ஏழாம் நூற்பாவின் இரண்டாம் கூறு.

கரணத்திற்கு அறிவில்லை என்பதை உடன்படாமல் பாச ஞானம் என்னும் வழக்கே பற்றிப் பாசமாகிய கரணத்திற்கு அறிவு உண்டு என்னும் வாதிகள் உளர், 'அதுதான் நிரூபிக்கின் இன்றா கலான்' என்னும் ஏதுவினால் அவரை மறுப்பார் மெய்கண்டார். பொதுவாக நோக்கும் போது, பதியினுடைய ஞானம் பதிஞானம் எனவும், பசுவினுடைய ஞானம் பசு ஞானம் எனவும் கூறுமாறு போலப் பாசத்தினுடைய ஞானம் பாசஞானம் எனக் கூறுவது பொருந்துவது போலத் தோன்றினாலும், ஐயந்திரிபின்றி ஆராய்ந்து காணுமிடத்துப் பாசமாகிய சடத்திற்கு ஒரு காலத்தும் ஞானம் இல்லை என்பதே உண்மையாகும். எனவே பாசஞானம் என்பதற்குப் பாசத்தினுடைய ஞானம் எனப் பொருள் காணுதல் தவறாகும். பாசத்தின் வழியாக உயிரின்கண் நிகழும் ஞானமே பாசஞானம் எனப்படும்.

ஒரு பொருளே பொதுவாகப் பார்க்கும் போது ஒரு வகையாகத் தோன்றி, ஆராய்ந்து நுணுகி நோக்குமிடத்து வேறு வகையாய் முடியும் என்பதை உணர்த்துதற்குக் கானல் நீரை எடுத்துக் காட்டு வார் மெய்கண்டார். பாலை நிலத்தில் நீர் வேட்கையோடு

வருகின்றவன் எதிரே தோன்றும் கானல் நீரைப் பருகும் நீரெனவே கருதுவான். இவ்வாறு பொதுவாகப் பார்த்த போது நீராகத் தோன்றிய அத் தோற்றம், உண்மையாக ஆராய்ந்து நோக்குங் காலத்தில் பொய்யாய் முடியும். அதுபோல, நல்லாசிரியனது அருளைப் பெறாதவர் அசத்தாகிய கரணம் அறிவில்லது என்று உணர மாட்டாராய், சத்திற்குரிய அறிவாம் தன்மையையே அதனிடத்துக் காண்பர். ஆயின் ஆசிரியனது அருளைப் பெற்று அசத்தாகிய கரணத்தின் இயல்பை ஆராய்ந்து காண வல்லார்க்கு அஃது அறிவற்றது என்னும் உண்மை புலனாகும்.

'பேய்த்தேர் நீர் என்றுவரும் பேதைக்கு மற்றணைந்த
பேய்த்தேர் அசத்தாகும் பெற்றிமையின்-வாய்த்ததனைக்
கண்டுணர்வார் இல்வழியிற் காணும் அசத்தின்மை
கண்டுணர்வார் இல்லதெனக் காண்'

அசத்தினுக்கு உணர்வின்று என்பதைத் தெளிந்து, அவற்றைத் தம்மியல்பின் வேறாகக் கண்டு நீங்குவர் திருவருள் உடையோர் என்பதனைச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் முன்பே எடுத்துக் காட்டியுள்ளமை அறியத் தகுவதாகும்.

'அறுபதும் பத்தும் எட்டும் ஆறினோடு அஞ்சும் நான்கும்
துறு பறித் தனைய நோக்கிச் சொல்லிற் றொன்றாகச் சொல்லார்
நறுமலர்ப் பூவும் நீரும் நாடொறும் வணங்கு வார்க்கு
அறிவினைக் கொடுக்கும் ஆரூர் அப்பனே அஞ்சினேனே! (7:8:3)

அசத்தாகிய தத்துவக் கூட்டமெல்லாம் புதராக, வேறாகக் கண்டு சொல்லின், அவற்றை அறிவுடைய தம்மியல்பாக ஒருவரும் கூறார். அவை, தம்மை யானாகவே மயங்கும் வண்ணம் என்னியல்பை மறைத்து நிற்கின்றன. அவற்றிற்கு அடியேன் அஞ்சினேன் என்பது இப்பாட்டின் பொருள். 'அசத்தினுக்கு உணர்வின்று என்றது; அதுதான் நிரூபிக்கின் இன்றாகலான்' என மெய்கண்டார் அமைத்துக் கொண்ட வார்த்திகத்திற்கு மேற் காட்டிய சுந்தரர் திருவாக்கு வழி வகுத்துக் கொடுத்தது போல அமைந்துள்ளமை நுணுகி நோக்குதற் குரியது.

சீக்கியக் குருதுவாராவும் வழிபாட்டு முறைகளும்

—அ. நடராசன் எம்.ஏ,எம்.பில்.,டிப்.பஞ்சாபி,

முன்னுரை

இந்துக்களுக்குக் கோவில் போல, முகம்மதியர்களுக்கு மசூதி போல, கிறித்துவர்களுக்குப் புனித ஆலயம் போல, சீக்கியர்களுக்குக் 'குருதுவாரா' புண்ணியக் கோவிலாகும். பஞ்சாப் மாநிலத்தில் குருதுவாரா இல்லாத கிராமமே இல்லை எனலாம். சீக்கியர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ அங்கெல்லாம் குருதுவாரா இருக்கும். தங்களின் சின்னமான மஞ்சள் நிறக் கொடியை அதில் பறக்க விட்டிருப்பர். அவர்களின் வழிபாட்டு முறை மிகவும் சிறப்பானது. இக்கட்டுரை குருதுவாரா தோன்றியது முதல் அங்குச் சீக்கியர்களால் நிகழ்த்தப் பெறும் வழிபாடுகள்வரை சுருக்கமாக விளக்க முனைகிறது.

1. குருதுவாரா – ஒரு விளக்கம்

'குருதுவாரா' என்பது சீக்கியர்களின் கோவில். குருத்துவாராக்களைத் தோற்றுவிக்குமுன் தருமசாலைகள் காணப்பட்டன. பிறகு தங்களுடைய மதத் தேவைகளையும், சமுதாயத் தேவைகளையும், பூர்த்தி செய்வதற்காக இக்குருதுவாராக்கள் தோற்றுவிக்கப்பட்டன. இதிலும் இரண்டு பிரிவுகள் உண்டு. அமிர்தசரசில் உள்ள பொற்கோவிலில் தர்பாராசாகிப் என்றும் ஹர்மந்தர் சாகிப் என்றும் பிரிவுகள் காணப்படுகின்றன. பிற்காலத்தில் சீக்கிய மதகுருக்கள் மத போதனைகளுக்காக வருகை தந்த காரணத்தாலும் சில அரசியல் காரணங்களாலும் இத்தகைய குருதுவாராக்கள் சரித்திர முக்கியத்துவம் பெற்றன.

தோற்றம்

தொடக்க காலத்தில் இவை கீர்த்தனைகள் பாடும் அறைகளாக இருந்தன. சீக்கியர்களின் முதல் குருவான குருநானக்கு கர்தார்பூரில்

'தர்மசாலை' ஒன்று நிறுவினார். அதன் பின்னர் அவர் சென்றவிடங்களில் எல்லாம் வணங்கும் நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டன என்பதற்கு ஆதாரமாகக் கீழ்க்காணும் ஆதிகிரந்தத்தின் பாடல் குறிப்பிடப்படுகிறது.

''குருநானக்கு கால்பட்ட இடமெல்லாம் வணங்கும்
நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன
உலகத்தில் எல்லா மத நிலையங்களும் குருநானக்கின்
போதனை நிலையங்களாயின
ஒவ்வொரு வீடும் தருமசாலை, கீர்த்தனை பாடவேண்டும்
வைசாகித் திருவிழா வரை''[1]

என்று பாய் குருதாசு குறிப்பிடுகின்றார். எனவே குருநானக்கு சென்றவிடமெல்லாம் மதநிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன என்பது தெளிவாகிறது.

மேலும் இத்தகைய நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டமைக்கு இரு நிகழ்ச்சிகளைக் காரணம் காட்டுகின்றனர். குருநானக்கிடம் இறைவன் தோன்றி, ''வைணவர்கள் கோயில்களைப் போல, யோகிகளின் ஆசிரமம் போல, முகம்மதியர்களின் மசூதி போல உங்களைப் பின்பற்றுபவர்கள் தருமசாலையைக் கொண்டுள்ளனர்'' என்று கூறியதாக மக்கள் மத்தியில் பேசிக் கொள்கிறார்கள் ''சஜன் என்பவனால் குருநானக்கிற்குக் காணிக்கையாகச் செலுத்தும் பொருட்டு 40 ஜனம் சகியில் முதல் தருமசாலா ஏற்படுத்தப்பட்டது''[2]

முகம்மதிய மன்னரின் உயர் அலுவலர் ஒருவர் குருநானக்கை அம்மாவட்டத்திலிருந்து வெளியேற்றக் குதிரையில் வந்து கொண்டு இருந்தார். அந்த ஊரின் எல்லையைத் தொட்டவுடன் குதிரை கீழே விழுந்துவிட்டது. அவனுக்குக் கண் பார்வை போய்விட்டது வழியறியாது குழம்பிப் புலம்பிய அவனிடம் 'நீ தவறு செய்துவிட்டாய்; குருவின் அருமை உனக்குத் தெரியாது போ.. அவரிடம் சென்று மன்னிப்புக் கேள்' என்று அந்த அதிகாரியைக் குருவிடம் அனுப்பி வைத்தனர். அவன் குருவின் கால்களில் விழுந்து வணங்கித் தான் செய்ய நினைத்த தவறுக்கு மன்னிக்கும்படி வேண்டினான். குருவும் அவனை மன்னிக்க அவனுக்குக் கண் பார்வை வந்தது. இதன் காரணமாக அவன் குருவுக்குக் காணிக்கையாக ஒரு பகுதி நிலங்களை வழங்கினான். முதலில் பெற மறுத்த குருநானக்கு பின் அதனைப் பெற்றார். அங்குத் தருமசாலை நிறுவப்பட்டது

வரலாற்றுக் குருதுவாராக்களில் சில

தருமசாலைகளாக நிறுவப்பட்ட நிறுவனங்கள் குருதுவாராக்களாயின என்ற செய்தி முன்பே கூறப்பட்டது அமிர்தசரசில் உள்ள பொற்கோவிலுக்கு அன்றும் இன்றும் சீக்கிய மக்களிடையே உயர்ந்த இடமுண்டு காரணம், அதுதான் சீக்கியர்களின் புண்ணியத்தலம் ஆகும் இதனுடன் சீக்கியக் குருக்களான குரு இராம்தாசு, குரு அர்சுன்சிங் ஆகியோருக்குப் பெரும் பங்குண்டு தம் வாழ்நாளில் ஒருமுறையேனும் பொற்கோவிலுக்குள் சென்று வணங்க வேண்டும் என்பது சீக்கியர்களின் முதன்மையான ஆசை.

மராட்டிய மாநிலத்தில் நந்தேடு என்னுமிடத்திலுள்ள 'தகத்ஸ்ரீ ஹசூர் சாகிப்' குருதுவாராவும், அமிர்தசரசில் உள்ள ஸ்ரீஅகால் தகத் சாகிப் குருதுவாராவும். பீகார் மாநிலத்தில் பாட்னா நகரில் உள்ள 'தகத் ஸ்ரீபாட்னாசாகிப்' குருதுவாராவும், அனந்தப்பூர் சாகிபில் உள்ள 'தகத்ஸ்ரீ கேஸ்கர் சாகிப்' குருதுவாராவும் சீக்கிய மதத்தினரால் போற்றப்பட்டு வரும் வரலாற்றுச் சிறப்புமிக்க மிக முக்கியமான குருதுவாராக்களாகும். குருநானக்கு பிறந்த இடத்தில் உள்ள 'நங்கானாசாகிப்' குருதுவாராவும் வரலாற்றுப் புகழ்பெற்றது. இங்குக் குருநானக்கு பிறந்ததினம் சிறப்பாக ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடப்படுகிறது. இது இப்பொழுது பாகிஸ்தானில் உள்ளது.

அனந்தப்பூர் சாகிப் என்ற இடத்தில் உள்ள குருதுவாராவுக்கும் சீக்கியர்களின் கடைசிக் குருவான குருகோவிந்த்சிங்குக்கும் தொடர்புண்டு. இங்கிருந்துதான் குருகோவிந்தர் முகம்மதிய மன்னர்களை எதிர்த்து யானைமீது அமர்ந்து போர் புரிந்தார் எனச் சீக்கிய வரலாறும், பஞ்சாப் வரலாறும் தெளிவுறுத்துகின்றன. மேலும் இவர் இங்கிருந்துதான் 'கால்சா'[3] வைத் தோற்றுவித்தார். அந்தக் 'கால்சா' நிறுவனம்தான் இன்றுவரை பஞ்சாப்பில் சீக்கியர்களால் பெரியதென மதித்துப் பாராட்டப்பெறும் உண்மையான, தூய்மையான நிறுவனம் ஆகும்.

தில்லியில் உள்ள 'சிஸ்கன்ஜ்' குருதுவாரா சீக்கியக் குருவான குருதேக்பகதூருடன் தொடர்புடையது. 'டல்கவோடு' என்ற கிராமத்திலுள்ள குருதுவாராவில் தில்லி செல்லும் வழியில் தங்கியதால், இதற்கும் சரித்திர முக்கியத்துவம் உண்டு.

குருஹர்கோபிந்துக்குப் பிறகுதான் இவை அதிகமானது என்று

கூறலாம் அவர் போதனைகளுக்கும், பிரார்த்தனைகளுக்கும் அதிகமாக ஏற்பாடு செய்தார்.

மேலும் முகம்மதியர்களுடன் போர் நடந்த இடங்களில் தோன்றியுள்ள குருதுவாராக்களுக்கும் சரித்திர முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

குருதுவாராவைச் சுற்றி

இப்பொழுது வரலாற்றுச் சிறப்புமிக்க குருதுவாராக்கள் இந்தியாவிலும் பாகிஸ்தானத்திலும் காணப்படுகின்றன. பெரும்பாலும் இவை வெள்ளைக் கற்களைக் கொண்டே கட்டப்படுகின்றன. எல்லாக் குருதுவாராக்களிலும் மஞ்சள் நிறக் கொடி பறக்கும்.

சிறிய வழிபடும் நிலையமாகத் தொடங்கப்பட்ட குருதுவாராக்களின் மூலம் இப்பொழுது பல சமுதாய முன்னேற்றத்துக்கான மக்களுக்குப் பயன்படுகின்றவகையில் பல அமைப்புக்களை உருவாக்கியுள்ளனர். பெருப்பாலும் குருதுவாராவோடு இணைத்து மருத்துவ மனைகள் காணப்படுகின்றன. வெளியூர்களில் இருந்து வரும் பயணிகள் தங்கிக் கொள்வதற்கேற்பத் தங்கும் வசதி கொண்ட அறைகள் உள்ளன. இதிலிருந்து வருகின்ற வருமானத்தின் மூலம் பள்ளிகள் நிறுவியுள்ளனர். அனந்தப்பூர் சாகிபில் உள்ள கால்சா நிறுவனத்தின் மூலமாகச் சில கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன.

கோவிலின் உட்பகுதியின் மையத்தில் சிறிய திட்டில் சீக்கியர்களின் ஆதி கிரந்தம் வைக்கப்பட்டிருக்கும். அதன் அருகில் ஒரு பூசாரி அமர்ந்து கிரந்தம் படிப்பார் சுவர்களின் சீக்கிய குருக்களின் படங்கள் மாட்டப்பட்டு இருக்கின்றன. சீக்கிய மக்களின் வீரச்செயல்களுக்காக படங்களும் முகம்மதிய மன்னர்களை எதிர்த்து அவர்கள் போராடிய போர்ப் படங்களும் காணப்படுகின்றன. சுவர்களில் சீக்கிய குருக்களின் போதனைகள் எழுதப்பட்டுள்ளமை தெரிகிறது. எல்லாக் குருதுவாராக்களிலும் இப்பொழுது ஒலிபெருக்கிக் கருவிகள் இணைக்கப்பட்டுள்ளன. பக்தர்களுக்கு இலவசமாக உணவு தயாரித்து வழங்கும் இடம் உள்ளது. இதற்கு 'லங்கர்' என்பது பெயர். யார் குருதுவாராவிற்கு வந்தாலும் முதலில் லங்கர் அருந்தி விட்டுப் பின் வணங்கச் செல்ல வேண்டும் என்பது குருநானக்கின் விருப்பம். முக்கிய பெரிய குருதுவாராக்களில் சீக்கியர்களின் வரலாற்றைத் தெளிவாக்கும் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

குருதுவாராவின் சிறப்பு

குருநானக்கைச் சந்திக்க வருகை தந்த முகலாய மன்னர் அக்பரை முதலில் லங்கர் அருந்திவிட்டுத் தன்னைச் சந்திக்கக் குரு பணித்தாகவும், அக்பர் லங்கர் அருந்தியபின் நானக்கைச் சந்தித்தார் என்றும் ஒரு செய்தி ஆதி கிரந்தத்தில் காணப்படுகிறது.

குருதுவாராவின் சிறப்பைக் கூறும் வகையில் ஒரு கதை கூறப் படுகிறது ஒரு மன்னர் இருந்தார். அவர் சிறப்புற ஆட்சி நடத்தி னார் ஆனால் அவருக்குக் குழந்தை இல்லை. அதனால் மன்னரும், அரசியும் மிகவும் வருந்தினார்கள். ஒருநாள் அரசி மன்னரிடம் நமக்குக் குழந்தை வேண்டி நாம் ஏன் குருவின் முன் வேண்டக் கூடாது? என வினவினாள். மகிழ்வோடு ஒப்புக் கொண்ட மன்னர் தம் மனைவியுடன் குருதுவாராவிற்கு வருகை தந்தார். மனத்தை ஒருநிலைப்படுத்திக் குருவை நினைத்துக் குழந்தைக்காக வேண்டி னார். அதன்பின் அவர்களுக்குக் குழந்தை பிறந்தது. இது குருவின் மகிமையாலும், குருதுவாராவின் சிறப்பாலும் ஏற்பட்டது என்கின்றனர். குருதுவாராவிற்குள் சென்று மனதார இறைவனை நினைத்து வேண்டினால், வேண்டுதல் பலிக்கும் என்பது சீக்கியர் களின் நம்பிக்கை. குரு கிரந்தமும் குருதுவாராவும் சீக்கியர்கள் வாழ்வின் வழிகாட்டிகள் என்ற நம்பிக்கையுடன் வணங்குகின்றனர்.

வழிபடும் முறைகள்

சீக்கியக் குருதுவாராக்களில் அதிகாலை முதல் வழிபடும் மக்கள் வருகை புரிவதைக் காணலாம். காலை 4 மணிமுதல் 6 மணிவரை வழிபடும் நிகழ்ச்சிக்கு 'ஆசாதிவார்'[4] என்பது பெயர். மாலை 6 மணியி லிருந்து வணங்கும் முறைக்கு 'ஆர்த்தி'[5] என்பது பெயர். காலை, மாலை இருவேளைகளிலுமே சீக்கிய மதத்தைச் சேர்ந்த மக்கள் குருதுவாரா சென்று வழிபடுவது வழக்கம். காலையில் செல்வதைவிட மாலையில் செல்வதை பலர் விரும்புகின்றனர். குறிப்பாக அலுவலகங்களிலும், பிற வெளியிடங்களிலும் அலுவல் புரியும் மக்கள் மாலையில் செல்வதைப் பழக்கமாகக் கொண்டுள்ளனர் பிற மக்களும், பெரும்பாலும் பெண்களும் காலையில் வழிபடுவதில் அக்கறை காட்டு கின்றனர்.

காலை எழுந்தவுடன் குளித்துவிட்டுச் செல்ல வேண்டும் என்பது விதியாக உள்ளது. மற்ற நேரங்களில் செல்லும் மக்கள் கால்களைக்

கழுவி விட்டுச் செல்கின்றனர். எந்த நேரமானாலும் குருதுவாராவின் படிக்கட்டில் காலை எடுத்து வைக்கும் முன்பாகக் கால்களைக் கழுவிக் கொள்ளவேண்டும் என்பது பழக்கமாக இருக்கிறது. இதன் காரணமாகவே குருதுவாராவின் முன்புறம் குழாயிலோ தொட்டியிலோ தண்ணீர் நிரப்பி வைக்கின்றனர். அமிர்தசர், பட்டியாலா, அனந்த்பூர் போன்ற பெரிய ஊர்களில் உள்ள குருதுவாராக்களில் வாயிலில் உள்ள முதல் படிக்கட்டுக்குக்கீழ் பள்ளம் ஏற்படுத்தி அதில் தண்ணீர் இருக்குமாறு வைத்துள்ளனர். அதற்கருகில் குழாயில் இருந்து தண்ணீர் அப்பள்ளத்தில் ஒருபுறம் விழுந்து கொண்டு இருக்கும். மறுபுறம் வெளியேறிக்கொண்டு இருக்கும். வணங்கச் செல்லும் மக்கள் தண்ணீரைக் கொண்டு முகம், கை, கால்களைச் சுத்தம் செய்கின்றனர்.

படிக்கட்டில் காலெடுத்து வைக்கும் முன்பாகவே தங்களுடைய தலையை மூடவேண்டும் என்பது மரபு. பெண்கள் தங்கள் கழுத்தில் அணிந்துள்ள 'துப்பட்டா' என்ற துணியை எடுத்துத் தலையில் இட்டுக் கொள்கின்றனர். சீக்கிய ஆண்களுக்கு அது அவசியமில்லை. காரணம் அவர்கள் ஏற்கெனவே தலைப்பாகையிட்டுள்ளனரே? மற்ற மதத்தைச் சார்ந்தவர்கள் செல்ல வேண்டும் என்றால் தலையில் கைக்குட்டையாலோ, துண்டாலோ மறைத்தல் வேண்டும். புதிதாகச் செல்பவர்களின் வசதி கருதித் தேவைப்படுகின்றவர்களுக்குக் குருதுவாராவின் சார்பாகவே முகப்பில் சிறிய துண்டு வழங்குகின்றனர். காலணிகளை வெளியே கழற்றி வைத்துவிட்டுச் செல்லல் வேண்டும். எந்த மதத்தினர் வேண்டுமானாலும் உள்ளே சென்று வணங்கலாம்.

படிக்கட்டில் ஏறும்பொழுது ஒவ்வொரு படிக்கட்டையும் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொள்கின்றனர். குருதுவாராவினுள் ஆதிகிரந்தம் வைக்கப்பட்டிருக்கும். ஆதிகிரந்தத்தின் முன்னால். சென்று மண்டியிட்டு வணங்குகின்றனர். தங்களால் இயன்ற காணிக்கையைக் கிரந்தத்துக்கு முன் விரிக்கப்பட்டுள்ள துணியில் போட்டு வணங்குகின்றனர். வணங்கிவிட்டுக் கிரந்தத்தில் எதிரில் அமர்ந்து இறைவனை நினைத்து, கிரந்த வரிகளைச் சொல்வதைக் காணலாம். ஆதிகிரந்தம் இருக்கும் இடத்தின் முன்பாகத் தரை விரிப்பு விரிக்கப் பட்டு இருக்கும். சிறிய குருதுவாராக்களில் அது இல்லாமலும் இருக்கும்.

இசைக்கருவிகளோடு கீர்த்தனை

இசைக் கருவிகளுடன் இசைத்துப் பாடக்கூடிய கலைஞர்கள் பெரிய குருதுவாராக்களில் உள்ளனர். அவர்கள் கீர்த்தனை பாடுவர். அது ஒலி பெருக்கியின் மூலம் ஒலிபரப்பப்படும். அவர்கள் ஆதிகிரந்தத்தில் காணப்படும் 'ரஹிராஸ்'[6] என்ற இசையைப் பாடுகின்றனர். 'குர்பானி'[7] பாடப்பெறும். குர்பானி என்பது மதத்தைப் பின்பற்றுபவர்களுக்காகக் குருவினரால் அளிக்கப்பட்ட போதனைகளாகும். கிராமங்களிலும் ஒலிப்பெருக்கியின் மூலம் இச்செய்தி ஒலிபரப்பப்படுகின்றன.

''இசையும் பாடல்களும் வரவேற்கப்படுகின்றன
அவைமூலம் மனம் இறைவனை நோக்கி ஒருமுகமடையும்''

AG. 849

என்று சீக்கியர்களின் மூன்றாவது குரு குறிப்பிடுகிறார். எனவே இசையுடன் கூடிய கீர்த்தனை பாடுவதில் பெரிதும் ஆர்வம் காட்டுகின்றனர். இந்தக் கீர்த்தனையில் கதைகள் கூறப்படுகின்றன. சீக்கியக் குருக்களின் சீக்கிய மக்களின் வீரச் செயல்களையும், நல்ல செயல்களையும் அவர்களின் சேவைகளையும் குறிப்பிடுகின்றனர். குருதுவாராவில் 'கராபிரசாத்'[8] வழங்கப்படும்.

குரு கிரந்தந்தை வணங்கிவிட்டு அதை ஒருமுறையோ மூன்று முறையோ சுற்றி வணங்கிவிட்டுச் செல்லும் பழக்கம் காணப்படுகிறது. குருதுவாராவைவிட்டு வெளியில் செல்லும்பொழுதும் படிக்கட்டுகளை ஒவ்வொன்றாகத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்கின்றனர்.

முடிப்புரை

சீக்கிய மதத்தினர் குருதுவாராக்களுக்கும், குருகிரந்தத்துக்கும் அவைகளை வழிபடும் முறைகளுக்கும் அளிக்கும் முக்கியத்துவம் தெளிவாகத் தெரிகிறது. தங்களுடைய மதக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதில் தீவிர கவனம் செலுத்துகின்றனர். மனிதனைத் தெய்வமாகவும், மனித வாக்கைத் தெய்வ வாக்காகவும் வைத்து வணங்கும் இவர்களுடைய முறை பிற மதங்களின் முறைகளிலிருந்து வேறுபடுவதைக் காணலாம். குருதுவாராக்களைப் பற்றியும் அங்கே வழிபடும் முறைகள் பற்றியும் இக்கட்டுரை சுருக்கமாகத் தந்துள்ளது. இந்த வாழிபாட்டு முறைகளையும் தமிழர்களின் வழிபாட்டு முறைகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்தால் பல ஒற்றுமைகளைக் காணமுடியும்.

அடிக்குறிப்புக்கள்

1. Guru Granth Sahib, Var I pouri, 27.
2. Sikh History, p.62.
3. 'கால்சா' — குரு கோபிந்த் சிங்கால் தொடங்கப்பட்ட சகோதரத்து வத்தை விளக்கும் நிறுவனம்
4. ஆசாதிவார் — சீக்கியக் குருதுவாராக்களில் வழிபடும் காலை வழிபாடு.
5. ஆர்த்தி — சீக்கியக் குருதுவாராக்களில் வழிபடும் மாலை வாழிபாடு.
6. ரஹிராஸ் — குருகிரந்தத்தின் ஒரு பகுதி. குருதுவாராக்களில் வழிபடும் பொழுது பாடப்படுவது.
7. குர்பாணி — குருவின் போதனைகள்.
8. கராபிரசாத் — சீக்கியக் குருதுவாராக்களில் வழிபாட்டுக்குப்பின் வழங்கப்படும் பிரசாதம்.

இருமொழி அகராதிகளில் இலக்கணச் செய்திகள்

– டாக்டர் ஏ. ஆதித்தன்

அகராதிச் சொல்லிற்குக் கொடுக்கப்பெறும் இலக்கணச் செய்திகள் சொல்லின் பொருளை நன்கு தெரிந்துகொள்ளத் துணைபுரியும். மொழியின் இலக்கண அமைப்பினைப் பொறுத்து இலக்கணச் செய்திகள் அமையப்பெறும், எளிமையான இலக்கணமுடைய மொழியின் அகராதிச் சொல்லுக்கு மிகக் குறைந்த அளவு இலக்கணச் செய்தி இடம்பெறும்.

தமிழில் காணப்பெறும் தமிழ்-ஆங்கில இருமொழி அகராதிகள் சிலவற்றில் கொடுக்கப்பெற்றுள்ள இலக்கணச் செய்திகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலக்கணமும் அகரரதிச் சொல்லும் ஒன்றோடொன்று தொடர்புடையன. இலக்கணத்திற்கும் அகராதிச் சொல்லிற்கும் இடையே காணப்பெற்ற இடைவெளி, நோவம் சோம்ஸ்கியின் சொற்களஞ்சியக் கொள்கையின் தோற்றத்திற்குப் பின்னர் நிரப்பப் பெற்றது. இலக்கண விதிகளை அகராதிச் சொல்லோடு தொடர்பு படுத்திக் காட்டப்பெறும் நிலையில் மொழியமைப்பினை எளிதில் புரிந்துகொள்ளுதல் இயலும்.

T. 4811

இலக்கணச் செய்திகளைக் கொடுக்கும் நிலையில் எத்தகைய இலக்கணச் செய்திகளை, எந்த அளவு, எந்த முறையில் சுட்ட வேண்டும் என்பது அடிப்படைக் கூறாகும்.

அகராதிச் சொல்லுக்கு அனைத்து இலக்கணச் செய்திகளைச் சுட்டுதல் அரிதென்பதால் மிகத் தொடர்புடையனவற்றையே கொடுக்கவேண்டும். அகராதிச் சொல்லின் உருபனியல், தொடரியல் சிறப்புக்கூறுகளைச் சுட்டுவதற்கு இலக்கணச்செய்திகள் பெரிதும் பயன்படுகின்றன.

தமிழ்–ஆங்கில இருமொழி அகராதிகள் இலக்கணச் செய்திகளுக்கு முதலிடம் கொடுக்கவில்லை. பெரும்பான்மையான அகராதிகள் சொல்வகையினைச் (Part of speech) சுட்டுவதனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டுள்ளன.

இலக்கணச் செய்தியினைப் பொதுவாக அகராதிகள் மூன்று வகையாகச் சுட்டுகின்றன ஒவ்வோர் அகராதிச் சொல்லுக்குமுரிய இலக்கணச் செய்தியினைத் தனித்தனியாகச் சுட்டும் முறையையே பெரும்பான்மையான அகராதிகள் பின்பற்றியுள்ளன. சில அகராதிகள் இலக்கணச் செய்திகளை முன்னுரை அல்லது பின்னிணைப்பில் கொடுத்துவிட்டு அகராதிச்சொல் பற்றிய இலக்கணச் செய்திக்கு எண்ணிட்டுக் காட்டியுள்ளன. இன்னும் சில அகராதிகள் பொதுவான இலக்கணச் செய்திகளை முன்னுரையில் குறிப்பிட்டுப் பின்னர் விதிவிலக்கு இலக்கணச் செய்திகளை மட்டும் அகராதிச் சொல்லோடு குறிப்பிட்டுள்ளன.

இலக்கணச் செய்திகளைச் சுட்டுவதில் மொழியின் இலக்கண அமைப்பும், அகராதி தயாரிப்பவரின் கருத்தும் அடிப்படைகளாக அமையப்பெறுகின்றன.

இலக்கணச் செய்திகளைக் குறிப்பிடுமுன் அகராதிச்சொல்லின் இலக்கண வடிவத்தினை (grammatical form of the entry) முடிவு செய்தல் வேண்டும். தமிழ் அகராதிகளில் பெயர், வினைகளுக்கான அகராதிச்–சொல்லின் இலக்கண வடிவத்தினைத் தெரிவு செய்வதில் சீர்மை காணப்பெறவில்லை.

அகராதிச் சொல்லின் இலக்கண வடிவத்தினை மொழியியல் அடிப்படையிலும் பண்பாட்டு அடிப்படையிலும் (Robinson F., Manual for bilingual dictionaries, P.35) தெரிவு செய்தல் வேண்டும்.

மொழியியல் அடிப்படையில் அகராதிச்சொல் வடிவம் எளிமையானதாகவும் (simple form), அடிப்படை இலக்கணக்கூறுகளை வெளிப்படுத்தும் வடிவமாகவும், குட்டையான வடிவமாகவும் (short form), மொழியில் பயின்றுவரும் வடிவமாகவும், ஆக்கச் சொற்கள், தொகைச் சொற்கள் போல்வனவற்றை வருவிக்கத் தக்க அடிப்படை வடிவமாகவும் (base form) இருக்கவேண்டுமென்பது சுட்டுப்பெறுகின்றது.

மேலும் இவ்வடிவம் பண்பாட்டு அடிப்படையில் பொருளைச் சுட்டுவதில் எளிதாக அமையும் வடிவமாகவும், அகராதியினைப் பயன்படுத்துவோருக்கு எளிமையாக அமையும் வடிவமாகவும் அமைய வேண்டுமெனக் குறிக்கப்பட்டுள்ளது.

அகராதிச் சொல்லின் இலக்கண வடிவம் மொழி, பண்பாடு ஆகியவற்றிற்கேற்ப அமையப் பெறும்.

வினைச் சொற்களைப் பொறுத்தமட்டில் ஏவல் வினை சிறிய வடிவமாக அமைவதால் அதனைப் பல அகராதிகள் அகராதிச்சொல் வடிவமாகக் கொண்டுள்ளன. இவை மொழியில் பயின்று வருவது மில்லை; பண்பாட்டு நிலையில் மரியாதை குறைவானதாகவும் கருதப் படுகின்றது.

பெஸ்கியின் அகராதியில் தொழிற்பெயர் வடிவம் வினையின் அகராதிச்சொல் வடிவமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வின்சுலோ ஏவல் ஒருமையினை அகராதிச் சொல்லாகக் குறிப்பிட்டுள்ளார். டுபுஸ் தமது தமிழ் - பிரஞ்சு அகராதியில் நிகழ்கால அஃறிணை ஒருமை வினைமுற்றினை அகராதிச் சொல்லின் இலக்கண வடிவமாகக் கொடுத்துள்ளார். இவர் வினைச் சொற்களைப் பகுக்கும் முறைமை குழப்பத்தினை ஏற்படுத்தியுள்ளது. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதி தொழிற்பெயர் வடிவத்தினை அகராதிச் சொல்லாகக் கொடுத்து, அதனை ஏவல் வினையாகக் கொள்ளுமாறு குறிப் பிட்டுள்ளது.

முத்துச்சண்முகன் (வினைக்குரிய தலைச்சொல், 1990, பக். 10) செயவெனெச்சத்தினை வினைக்குரிய அகராதிச் சொல்லாகக் குறிப்பிடுவதன் நிறையினைக் குறிப்பிட்டுள்ளார். செயவெனெச்சத் திற்கு இணையான சொல் பல பிறமொழிகளில் கிடைப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பெரும்பான்மையான இறந்த கால இடைநிலைகள் தமிழில் காணப் பெறுவதாலும், தமிழின் இருநிலை வழக்காலும் வினை புடைபெயர்பு இயல்பாலும் வினைச்சொற்கள் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளன. தமிழில் வினைத்திரிபுகள் பன்னிரண்டு வகைகளாகப் பகுக்கப்பெற்று வினைச்சொற்கள் எண்ணிடப்பட்டுள்ளன.

தமிழ் இருமொழி அகராதிகளில் தெரிநிலைவினைகள் பாகுபாடு செய்யப்பெற்று குறிப்பிடப் பெற்றிருப்பது போன்று குறிப்பு வினைகள் பற்றிய செய்திகள் விரிவாக அமையப்பெறவில்லை.

வினைச்சொல்லின் இலக்கண வடிவம் எண், பால். இடம், காலம், வினைமை (aspect) போன்றவற்றை எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் அகராதிச் சொல்லிலிருந்து வருவிக்கப்பெறும் வினைவடிவங்கள் துணை அகராதிச் சொல்லாகச் (sub-entry) சுட்டப்பெறும் வகையிலும் அமையப் பெறல் வேண்டும்.

பெயர்ச்சொல்லின் இலக்கண வடிவமாக எழுவாய் வேற்றுமை ஒருமை வடிவம் அகராதிகளில் குறிப்பிடப் பெற்றுள்ளது. எண். வேற்றுமை வேறுபாட்டினைப் பெயர்ச் சொல் சுட்டுமிடத்து சந்தி விதிகளால் ஏற்படும் மாறுதல்கள் அகராதிகளில் இடம்பெறவில்லை.

பெயரடை, வினையடைகளின் இலக்கண வடிவத்தினைச் சுட்டுவதிலும் தமிழ் இருமொழி அகராதிகளில் வேறுபாடு காணப்படுகின்றது. ‘நல்’ என்பதற்கும் ‘நல்ல’ என்பதற்கும் தனித்தனி அமைவு (entry) கொடுக்க வேண்டியதில்லை.

பெயர், வினைச் சொற்களின் இலக்கண வடிவினைக் குறிப்பிடும் நிலையில் தனித்தனி அமைவு கொடுக்க வேண்டியவற்றை ஒரே அமைவிலும் ஒரே அமைவில் கொடுக்க வேண்டியவற்றைத் தனித்தனி அமைவிலும் தமிழ் இருமொழி அகராதிகள் சில கொடுத்துள்ளமை தடுமாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது.

அகராதிச் சொல்லின் தன்மைக்கேற்ப இலக்கணச் செய்திகள் கொடுக்கப்பெறல் வேண்டும். முதலில் அகராதிச்சொல்லிற்கு நடைமுறையிலுள்ள ஒலிப்புமுறை குறிக்கப்பெறல் வேண்டும். பிறமொழியாளர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் மேற்கூற்று ஒலியன்களும் (supra segmental phonemes) குறிப்பிடப் பெறவேண்டும். இதன் பொருட்டு அகராதியின் முன்னுரையில் மொழியின் கண்ணுள்ள ஒலிகள், அவற்றின் ஒலிப்புமுறை, ஒலியன்கள், மாற்றொலிகள் போன்றவை சுட்டப்பெற வேண்டும்.

பிறமொழியாளர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் எழுதுமுறை (transcription) பயன்படுத்தப் பெறவேண்டும். மூலமொழியிலுள்ள (source language) எழுதுமுறையினையே அகராதியில் குறிப்பிடுதல் மிகுந்த பயனுடையதாக அமையும். சான்றாதாரங்களையும்

(illustrative examples) எழுதுமுறையில் சுட்டினால் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

தமிழ் இருமொழி அகராதிகள் ஒலிப்பு முறையில் பெரிதும் அக்கறை காட்டவில்லை.

உருபனியல், தொடரியல் தொடர்பான இலக்கணச் செய்திகள் அகராதிச் சொல்லின் பயன்பாட்டினைத் தெரிந்து கொள்ள மிகவும் துணைபுரியும். அகராதிச் சொல்லின் தொடரியல் கூறுகள் முற்றிலுமாகக் கூறப் பெறவேண்டும் என்பார் ஹவுஸ்ஹோல்டர் (Lists in grammars in logic Methodology and Philosophy of Science, 1960, P.576) இத்தகைய செய்திகளுக்கு முன்னர் பெரிதும் முதலிடம் கொடுக்கப் பெறவில்லை (Steger, A.. American dictionaries, 1913. P I).

பால், எண், வேற்றுமை போன்ற இலக்கணக் கூறுகளும் சொல் திரிபு (inflection) சொல்லாக்கம் (derivation) போன்ற பண்புகளைக் கண்டறிய இத்தகைய இலக்கணச் செய்திகள் பெரிதும் துணை புரிகின்றன. இதற்கேற்ப இருமொழி அகராதியின் முன்னுரைப் பகுதியில் இருமொழிகளின் இலக்கணம் விவரிக்கப்பெறல் வேண்டும். ஏனெனில் இலக்கு மொழியாளர் (target language speaker) மூல மொழியைத் தெரிந்து கொள்வதற்கும் மூலமொழியாளர் (source language speaker) இலக்குமொழியில் பல தொடர்களை உருவாக்கவும் இவை பெரிதும் உதவுகின்றன (Malkiel, Y., Lexicography in the learning of language, 1971, P.372).

உருபனியல் தொடர்பான இலக்கணச் செய்தியில் முதலிடம் பெறுவது சொல்வகையாகும். சொல்வகையினைக் குறியீடுகள் (labels) வாயிலாகச் சுட்டுவது அகராதியியல் மரபு. இதன் வாயிலாக இருமொழிகளில் காணப்பெறும் இணையான சொல்வகையினைக் கண்டறிய முடியும். மேலும் மொழியின் அமைப்பினைத் தெரிந்து கொள்ளவும் மொழி பெயர்க்கவும் இவை பெரிதும் பயன்படும்.

குறியீடுகள் வாயிலாகச் சொல்வகையினை உணர்த்தும் முறை முற்றிலும் வெற்றிபெறவில்லை எனலாம். தமிழ் இருமொழி அகராதிகளில் பெயர் (N), பதிலிப்பெயர் (Pron) எனப் பெயர்ச் சொல்லுக்கு இருவகைக் குறியீடுகளே பயன்படுத்தப்பட்டுள்ளன. பிறவகைப் பெயர்களும் அவற்றின் வகைகளும் குறிக்கப் பெறவில்லை.

வினைச்சொற்களில் செயப்படுபொருள் குன்றா வினை (v.t.) செயப்படுபொருள் குன்றியவினை (V.int.) எனும் இருவகைக் குறியீடுகள்தாம் பெரும்பான்மை அகராதிகளில் குறிப்பிடப்பெற்றுள்ளன. வினை வகைகள் எந்த அகராதியிலும் சுட்டப் பெறவில்லை.

பெயரடைகளைப் பொறுத்த மட்டில் ஒரே குறியீடுதான் (adj.) பல அகராதிகளில் சுட்டப் பெறுகின்றது. பெயரடைகளின் வகைகளோ அன்றி அவை பெயர்களுக்கு முன்னர் அன்றிப் பின்னர் வருமா என்பது பற்றிய குறிப்புக்களோ காணப் பெறவில்லை.

பெயரடைகளைப் போன்றே ஒரே குறியீட்டினைக் கொண்ட வினையடைகளும் (adv.) வகைகள், சொல்வினையடையா அன்றித் தொடர்வினையடையா என்பது போன்ற குறிப்புகளின்றிச் சுட்டப் பட்டுள்ளன.

பல அகராதிகளில் சொல்வகைப் பாகுபாடே முறையாக அமையவில்லை. இட வினையடைகள் சில அகராதிகளில் பெயர்களாகக் குறிப்பிடப் பெற்றுள்ளன. இத்தகைய குறைகள் கட்டாயமாகத் தவிர்க்கப்பெறல் வேண்டும்.

ஒரு சொல் இரண்டு சொல்வகைகளாகச் செயல்படும் நிலையிலும் தனித்தனி அமைவு கொடுக்காமல் ஒரே அமைவில் குறிப்பிடப் பெற்றிருப்பது இருமொழி அகராதியின் நோக்கத்தினைச் சிதைக்கின்றது.

இலக்கணச் செய்தியினை உடன் பாட்டு முறையிலும் எதிர் மறை முறையிலும் குறிப்பிடலாம். எந்த முறையினைப் பின்பற்றினாலும் அம்முறையினை முன்னுரையில் குறிப்பிட வேண்டும்.

தமிழ்-ஆங்கில இருமொழி அகராதிகள் சொல்வகை தவிர பிற இலக்கணச் செய்திகளுக்கு இடமளிக்கவில்லை. இத்தகைய நிலை இருமொழி அகராதிகளின் நோக்கினைச் சிதைக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

பாரதியின் காதல் தாகம்

-டாக்டர். கதிர். மகாதேவன்

நினைவுகளில் காதல் இனிது! நிகழ்வில் காதல் தோன்றி னால் இவ்வுலகம் இனிது; இழைந்து குழைந்து வரும் தென்றல் போல நெஞ்சத்தில் காதல் நினைவுகள் ஓர் இன்பச் சுமையாகும். மலரைக் கண்டால் காதல் மலரும்; பூவெல்லாம் தன்னிடத்துப் பூத்திருக்கும் பூவையைக் கண்டால் இன்பம்; கேட்டால் இன்பம்; ஆடினால் மீதூரும் இன்பம்; கூடினால் கொள்ளை இன்பம்!...... இவ்வாறெல்லாம் காதலைச் சிந்தையில் தேக்கிப் பாடாத புலவர் இல்லை எனலாம்.

காதல் எல்லை

உலகில் காதலைப் பற்றிப் பேசாத மொழி இல்லை. இது தான் காதல் என்று எல்லை வகுக்க இயலவில்லை. ஏனெனில், காதல் கட்டுப்பாட்டிற்கு அடங்காதது; அது அடக்காத பொருள் இல்லை! தாய் சேய் காதல் முதல் கடவுள் காதல் வரை காதல் பலவகைப்படும். என்றாலும், ஆண் பெண் காதலே காதல்; இதுவே உள்ளத்தால் உணரும் இன்பமும், உடலால் இணையும் இன்பமும், ஒன்றுசேர்ந்து மனிதர்களிடையே காணப்படுவது ஆகும். காலம், இனம், மொழி, சாதி, பசை, தசை, படிப்பு, பருவம் என இன்ன பிறவற்றை இணைத்தும் பிணைத்தும் ஏற்படுத்தும் எல்லையை எல்லையாகக் கொண்டது காதல் எனலாம்.

காதல் என்றால் என்ன?..

இந்த வினா பலரால் கேட்கப்பட்டது. பலர் விடைதந்துள்ளனர். ஆனால் இன்னும் முழுமையான பதில் கிடைக்காத ஒரு வினா. இந்த வினாவைத் தொடரும் பல கேள்விகள் உண்டு......காதல்

ஏன் தோன்றுகிறது? காதலை அறிவது எப்படி? காதல் பேசுமா? நாட்டுக்கு நாடு காதல் வேறுபடுமா? காதற் பாடல்களில் கொள்கைகள் உண்டா? காதற் கவிதை பாடுபொருளில் தேடு பொருள் யாது? இத்தகைய வினாக்களுக்கு அவரவர் அனுப வத்திற்கும் அறிவிற்கும் ஏற்றவாறு விடை சொல்லலாம். வாய்மொழி யாய் விளக்கப்படும் காதல் நிலைகள் நினைவுகளில் நிற்பதில்லை! ஆனால், தொடருவது உண்டு.

காதல் உரிமை

காதல் மொழிகளுக்கு உரியவர் யார்? காதல் மொழிக்கு உரியவர் இருவர்; ஒருவர் காதலர். பிறிதொருவர் கவிஞர். காதல் மொழிகள் காதலருக்கு மட்டுமே தெரியும்; கவிஞரின் காதல் மொழிகள் உலகு அறியும்; இதுவரை எந்தக் காதலரும் கவிஞர் மொழிந்த காதல் மொழியை மறுத்ததில்லை; காதல் கவிதைகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டவர்களே ஏராளம்! காதலர்கள் கவிஞர்களாவதும், கவிஞர்கள் காதலர்களாவதும் உலக இயற்கை: எனவே கவிதைகள் காட்டும் காதல் இவ்வுலகில் காதல் பற்றிய பல விளக்கங்களைத் தந்துள்ளன; இன்னும் தந்து கொண்டிருக்கின்றன; என்றும் காதல் தொடர்கதையாய்ச் செல்லும்.

காதலின் புகழைக் கண்டு அனுபவித்துப் பாடும் பாரதி,

''காதலிங்கே யுண்டாயிற் கவலை யில்லை;
பாட்டினிலே காதலைநான் பாட வேண்டிப்
பரமசிவன் பாதமலர் பணிகின் றேனே''

என்று காதல் பாட்டிலே திளைக்கின்ற பாரதி, காதலின் அருமை பெருமைகளைக் காப்பியத்திலும், கலைகளிலும், கனிவு தரும் சோலைகளிலும் கண்டவர்; கவிதையில் காதல் ஒளி உண்டாகப் பாடியவர். அவர்க்குக் காதலே உலகம்; எனவே, உலகை நோக்கி,...

''காதலினால் மானுடர்க்குக் கலவி யுண்டாம்
கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்;
காதலினால் மானுடர்க்குக் கவிதை யுண்டாம்;
கானமுண்டாஞ் சிற்பமுதற் கலைக ளுண்டாம்;
ஆதலினாற் காதல் செய்வீர் உலகத் தீரே'

அஃதன்றோ இவ்வுலகத் தலைமை யின்பம்!
காதலினாற் சாகாம லிருத்தல் கூடும்;
கவலைபோம், அதனாலே மரணம் பொய்யாம்''.

என்றார். மனிதர்களில் காதலில் விதிவிலக்கானவர் யார்? ...யாரு மில்லை? தமிழில் சமயத் துறவிகள்தாம்–அதிலும், சமண பௌத்த சமயத் துறவிகள்தாம்–காதல் காப்பியங்கள் பாடியுள்ளனர்.

இன்னும் ஆழமாகச் சிந்தித்தால் கடவுளர்களே காதலில் தோய்ந்தவர்கள்; காதலை ஆய்ந்தவர்கள். இதனைப் பாரதியார்

''ஆதிசக்தி தனையுடம்பி லரனுங் கோத்தான்
அயன்வாணி தனைநாவி லமர்த்திக் கொண்டான்
சோதிமணி முகத்தினளைச் செல்வ மெல்லாஞ்
சுரந்தருளும் விழியாளைத் திருவை மார்பில்
மாதவனு மேந்தினான்; வானோர்க் கேனு
மாதரின்பம் போற்பிறிதோ ரின்ப முண்டோ?
காதல்செயு மனைவியே சக்தி கண்டீர்
கடவுணிலை யவளாலே யெய்தவேண்டும்''

என்று கடவுளரின் காதலைச் சான்று காட்டிக் காதலின் உயர்வைக் கூறுகின்றார்.

காப்பியத்தில் காதல் இன்பம் தருகிறது; காப்பிய மாந்தர்க்குக் காதலினால் துன்பமும் இன்பமும் உண்டு. இலக்கியக் காதலில் ஏற்படும் இன்ப துன்பங்களைப் படிப்பவர்க்கு இன்பமே நின்று நிலவுகின்றது.

கவிஞர் காதல் வழிபாடு

காளிதாசன் கொங்கைகளைச் சிவலிங்கம் என்று பூசை செய்தான்; இராமனோ காதலில் மதிமயங்கிப் பெண்மானின் ஆசைக்காகப் பொன்மானின் பின் சென்றான். இதனைப் பாரதியார்,

''கொங்கைகளே சிவலிங்க மென்று கூறிக்
கோக்கவிஞன் காளிதா ஸனும்பூ ஜித்தான்
மங்கைதனைக் காட்டினிலு முடன்கொண் டேகி
மற்றவட்கா மதிமயங்கப் பொன்மான் பின்னே
சிங்கநிகர் வீரர்பிரான் தெளிவின் மிக்க
ஸ்ரீதரனுஞ் சென்றுபல துன்ப முற்றான்.

இங்குபுவி மிசைக்காவி யங்க ளெல்லாம்
இலக்கியமெல் லாங்காதற் புகழ்ச்சி யன்றோ?

என்று கூறுதல் சுவைத்துப் படித்து இன்புறத் தக்கது. பாரதியார் காதலைக் கனவுலகத்திலே கண்டு எழுதியவர் என்று எண்ண வேண்டா. நடைமுறை உலகில் காதல்படும் பாட்டைப் பாட்டாகத் தருகிறார்.

''நாடகத்திற் காவியத்திற் காத லென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றா மென்பர்
ஊடகத்தே வீட்டிலுள்ளே கிணற்றோ ரத்தே
ஊரினிலே காதலென்றா லுறுமு கின்றார்
பாடைகட்டி யதைக் கொல்ல வழிசெய் கின்றார்
பாரினிலே காதலெனும் பயிரை மாய்க்க
மூடரெலாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறைதவறி யிடரெய்திக் கெடுகின் றாரே''

என்று பாரதி பாடும்போது காதலெனும் கனிகளைச் சுவைக்காமல் சிதைக்க முற்படுவோர் நம் மனக்கண்முன் தோன்றுகின்றனர்.

அமர் × காதல் = அமைதி

பாரதியின் காதல் எண்ணங்கள் உலக அமைதிக்கு வழிவகுக்கும் கருவியாக உளது. குருவி போலக் கொஞ்சிப் பேசிக் காதலிலே களித்து வாழ்ந்தால், போர் ஏற்பட வழி ஏது? என்கின்றார். இப்பாடலைக் கொஞ்சம் சுவையுங்கள்!...உண்மை.. உண்மை... என்பீர்!

''காதலிலே யின்பமெய்திக் களித்து நின்றால்
கனமான மன்னவர்போ ரெண்ணு வாரோ?
மாதருடன் மனமொன்றி மயங்கி விட்டால்
மந்திரிமார் போர்த்தொழிலை மனங்கொள் வாரோ?
பாதிநடுக் கலவியிலே காதல் பேசிப்
பகலெல்லா மிரவெல்லாம் குருவிபோலே
காதலிலே மாதருடன் களித்து வாழ்ந்தால்
படைத் தலைவர் போர்த்தொழிலைக் கருது வாரோ!''

காதலில் உள்ளத்து இணைப்பையே பாரதி பெரிதும் விரும்புகின்றார்; உடல் பிணைப்பைக் காதல் என்று கூறிக் கண்டதும் காதல்-கொண்டதும் கோலம்-விண்டதும் விடுதலை எனும் மேலைநாட்டுக் காதலை அவர் விரும்பவில்லை என்பதை,

"'காதலிலே விடுதலையென் றாங்கோர் கொள்கை
கடுகிவளர்ந் திடுமென்பார் யூரோப் பாவில்
மாதரெலாந் தம்முடைய விருப்பின் வண்ணம்
மனிதருடன் வாழ்ந்திடலா மென்பார் அன்னோர்;
பேதமின்றி மிருகங்கள் கலத்தல் போலே
பிரியம்வந்தாற் கலந்தன்பு பிரிந்து விட்டால்
வேதனையொன் றில்லாதே பிரிந்து சென்று
வேறொருவன் றனைக்கூட வேண்டு மென்பார்''

என்று சாடுவர் பாரதி! அது மட்டுமா .. 'விரும்பினால் கூடலாம்; விருப்பமின்றெனில் ஓடலாம்' என்ற காதற் கொள்கை ஏன் முளைத்தது? ஆடவர்தாம் இதற்குக் காரணம் என்கின்றார். ஏனெனில், கற்பைப் பெண்களுக்குச் சுட்டி, ஆண்களுக்கு அது வேண்டா என்று கூறும் மனப்பான்மையே இதற்குக் காரணம் என்பர். விருப்பம் போல் மகிழலாம் என்ற கொள்கை பொய்மைக் காதல் என்பதை,

மாறாக் காதல்! தீராக் காதல்?

''வீரமிலா மனிதர்சொலும் வார்த்தை கண்டீர்;
விடுதலையாங் காதலெனிற் பொய்மைக் காதல்!
சோரரைப்போ லாண்மக்கள் புவியின் மீது
சுவைமிக்க பெண்மைநல முண்ணு கின்றார்
காரணந்தான் யாதெனிலோ - ஆண்க ளெல்லாம்
களவின்பம் விரும்புகின்றார். கற்பே மேலென்
றீரமின்றியெப்போதும் உபதே சங்கள்
எடுத்தெடுத்துப் பெண்களிட மியம்பு வாரே!''

என்று பாரதி கூறும்போது பழந்தமிழ்க் காதற் கொள்கையை அவர் மறக்கவில்லை என்று அறிந்து மனம் மகிழ்கின்றோம்.

காதலோடு தொடர்புடையது கற்பு. உள்ளம் மாறாக் காதலே காதல்! அதுவே கற்பு என்ற கொள்கையைப் பாரதியார் நிலைநாட்ட விரும்புகின்றார். எனவே, கற்பினைப் பெண்ணுக்கு என்று கூறும் பேதைமை அழியவேண்டும் என்பதை,

''ஆணெல்லாங் கற்பைவிட்டுத் தவறு செய்தால்
அப்போது பெண்மையுங்கற் பழிந்தி டாதோ?
நாணற்ற வார்த்தையன்றோ? வீட்டைச் சுட்டால்
நலமான கூரையுந்தா னெரிந்தி டாதோ?
பேணுமொரு காதலினை வேண்டி யன்றே
பெண்மக்கள் கற்புநிலை பிறழுகின்றார்?

என்ற வினாவைத் தொடுக்கிறார். காதல் விழுப்பம்-காதல் இழுக்கம் என்று கற்பை வகைப்படுத்த இயலாது. ஏனெனில், கற்பைச் சாதி, சமய, இன, நாட்டுப் பண்பாடுகள் அவர்தம் சூழலுக்கு ஏற்ப நியதிகளை ஏற்படுத்துகின்றன.

முக்கூட்டு அளவை (Three dimension)

கவிஞர்தம் வளமான கற்பனைக்கு வற்றாத ஊற்றாக ஆண், பெண் காதல் உளது என்பதை முன்னர்க் கண்டோம். காதற் சுவை காலங் கடந்த ஞால மதிப்பைப் பெற்றுள்ளது? பழந்தமிழ்க் காதற் பாடல்களை இன்று படித்தாலும் குன்றாத சுவையும் குறையாத இன்பமும் தோன்றுவதைக் காணலாம். காரணம், காதலை அறிந்து, அளந்து பாடிய பாங்கினை அங்குக் காண்கிறோம். காதலை உணர்வால் அறியலாம்; ஆனால் அளக்க இயலுமா?... இதற்குச் சங்கத் தமிழ் விடை தருகிறது ..

பருப் பொருளால், பரந்த பொருளால், ஆழ்ந்த பொருளால் சுட்டப்படும் முக்கூட்டு அளவைகளையும் ஈடுகட்டினாலும் இணை யில்லாதது காதல் என்பதைக் குறுந்தொகைப் பாடல் கூறுகிறது.

தேன் இனிக்கும்; தேனின் இனிமை தேனீ உண்ணும் பூவிற்கு ஏற்றவாறு மாறும் இயல்புடையது; காப்பிச் செடியிலே பூக்கும் பூவிலிருந்து சேகரிக்கும் தேன் கசக்கும்; சருக்கரை நீரில் சேகரிக்கும் தேன் தரம் குன்றிக் காணப்படும். எனவே, பூவின் திறத்திற்கேற்பத் தேனின் தரம் உயருகிறது. உயர்ந்த தரமுடைய தேன் என்றும் கெடுவதில்லை! தன் காதலன் நாட்டில் தேன் உயர்ந்தது; தரம் குன்றாதது; நயமுடையது. ஏனெனில், அவன் நாட்டில் கரிய கோலில் மலரும் குறிஞ்சிப் பூவில் தேன் எடுத்துப் பெரிய தேன் கூட்டைக் கட்டுகிறது; அந்தத் தேனின் இனியது தலைவனின் நட்பு. அதனை எடைபோட்டுப் பார்க்கிறாள் தலைவி. காதலினும் உயர்ந்தது நட்பு: எனவே, சங்க இலக்கியத்தில் 'நட்பு' என்ற சொல்லைக் காதலுக்கு இணையாகப் புலவர்கள் பல இடங்களில் பயன்படுத்துகின்றனர். காதலியால், தேனின் இனிய காதலை அளக்க இயலவில்லை! அதனால்,

''நிலத்தினும் பெரிதே! வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர்அளவின்றே-சாரல்

கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே''

என்று தலைவி பாடுகிறாள்.

பழந்தமிழ்க் காதல் பாடல்கள் காதலை இது எனக் காட்டி மனித இனத்தை-இயல்பை-இயற்கையை நிலைநாட்டுகின்றன. அவை காதல் உளவியல் தத்துவத்தை நிலைநாட்டுவனவாகும். மனநாடகம் (Drama of the mind) காதலின் நிலையாகக் கருதிய புலவர்கள் காதற் கவிதைகளை நாடக முன்னிலைப் பாடல்களாக (Dramatic monologues) அமைத்துள்ளனர்.

காதல் விளக்கு

காதலை விளக்கப் பலர் இந் நிலவுலகில் பாடுபட்டுள்ளனர். மனித வாழ்வில் காதலைப் பாலியல் வாழ்வோடு குறிப்பாக இணைத்துப் பார்ப்பதை எல்லாக் கவிஞர்களிடமும் காண்கிறோம். மனமே காதலுக்கு மையம்; ஐம்புலனின்பம் காதலுக்கு ஆதாரம்; புலனின்பம் இருபாலார்க்கும் பொது; ஆண் பெண்ணிடம் ஐம் புலனின்பம் காண்கிறான் என்று வள்ளுவர் கூறுதல் காணலாம். புணர்ச்சி மகிழ்தலைக் கூறும் போது,

''கண்டு கேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் அய்ம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள''

என்பர். எனின், பெண்ணிடத்தில் கண்டும் கேட்டும் உண்டும் முகர்ந்தும் உற்றும் அறிகின்ற அய்ம்புலன்களாலாகிய இன்பங்கள் காதலுக்குக் காரணங்கள் ஆகின்றன. இந்த அய்ந்து புலனின்பங் களில் ஒன்றும் பலவும் குறைந்து வருவன உண்டு. காதல் ஏற்படும் பொருளுக்கு ஏற்ப இது அமையும்.

நம் நாட்டு அறிஞர்களும் கவிஞர்களும் காதல் பேசும் கதை களையும் கவிதைகளையும் கட்டுரைகளையும் விரிவாக வரைந் துள்ளனர். அம்மொழிகளில் அரிய கருத்துக்கள் உள. ஆனால், அக்காதல் மொழிகளின் சிறப்பைத் தேர்ந்து தெளிந்து மகிழவேண்டு மானால், மேலைநாட்டார் காதல் பற்றி மொழிந்தவைகளை ஒப்பிட்டும் உறழ்ந்தும் நோக்குதல் வேண்டும்.

மதுரைத் தமிழ்ச் சங்கமும் பாண்டித்துரைத் தேவரும்

—புலவர் அரங்கசாமி

இமயமுதல் குமரிவரை ஒருமொழி வைத்துலகாண்ட ஒண்டமிழ். மலர் தலையுலகத்து மன்னிய மொழிபலவற்றுள்ளும் சீரும் சிறப்பும் செம்மையும் நன்மையும் இனிமையும் ஏற்றமும் இலக்கிய இலக்கண வரம்பும் பேச்சுவழக்கும் நூல்வழக்கும் பெற்று இலங்கி வாழும் மொழியாக வழங்கிவருகின்றது. பழைமை நாகரிகர் எனப் பாரோர் போற்றும் எகிப்தியர், யவனர் முதலிய மரபினருக்கும் முன்னரே நாகரிக நலம் பெற்றது நற்றமிழ். கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே முற்றோன்றி மூத்த குடியினராகிய முன்னோர், ஒன்றி வாழும் நெறியில் உள்ளக் கருத்தினை அடையாளக் குறியால் (சைகை) அறித்துணர்ந்த காலம் அகன்று, பின்னர் ஒலிக்குறியால் உணர்த்தி நாவசைத்துப்பேசி நல்லுரை நல்கியது நந்தமிழ் மொழி. புலனுழுதுண்ணும் புலவரைப் போற்றியதும், புலவர்பாடும் புகழுடையோராய புரவலரைத் தோற்றியதும் பண்ணார் பைந்தமிழே.

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பில் நாற்பெயரெல்லை அகத்தவர் வழங்கும் நற்றமிழ் வானார்ந்த நற்பொதியின் மிசை வளர்கின்ற மதியாகவும், செங்கோல்கொள் செல்வியாகவும் விளங்கியது. அன்னை மொழியார் ஆட்சியிலே பாவலர் யவரும் மாட்சியுறக் காட்சி பெற்று கவினுற்றோங்கிய காலமே சங்ககாலம். உயிர்க்குயிராக இலங்குவதும் உயர்தனிச் செம்மொழியாவதும் இம்மொழியே. தந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி தழைத்ததும் தமிழ்மொழியே. மூவேந்தரும் முச்சங்கம் நிறுவி மொழியை வளர்த்தனர். முத்தமிழாய்ந்த மொழிப்புலவோரைக் கண்ணெனக் கருதி கண்ணிமைபோல் காத்தனர்.

முத்தமிழ் போற்றிய மூவேந்தர் ஆட்சியிலே முரசு கட்டிலில் அறியாது ஏறிய மொழிப்புலவரை, இருபாற்படுக்கும் வாள்வாய்

ஒழித்ததோடு, துயில் எழுந்துணையுந் மதனுடை முழவுத்தோள் ஓச்சி விசிறி கொண்டு வீசி வியலிடங்கமழ விளங்கியது தமிழக அரசு. இளந்தத்தன் என்னும் புலவரை அன்றைய அரசு தம் செற்றத்தால் ஒற்றுவந்ததாக உளத்துக்கொளீஇக் கொல்லப் புக்குழி, கோவூர்கிழார் வடியாநாவின் வல்லாங்குப்பாடி பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி ஓம்பாதுண்டு கூம்பாது வீசி, வரிசைக்கு வருந்து மிப்பரிசில் வாழ்க்கை பிறர்க்குத் தீதறிந்தன்றோ இன்று, நண்ணார் நாண அண்ணாந்தேகி இனிதொழுகுவதோடு மண்ணாள் செல்வ மெய்திய நும் மோரன்ன செம்மலு முடைத்தென மொழிப் புலவரின் இயல்பினை அரசுக்கு அடுத்திருந்து எடுத்துரைத்து அல்லது செய்தலை அகற்றிய பண்பினை அனைவரும் அறிவர். சோழ அரசர் இருவர் மாறுகொண்டு பகைமையுற்றவழி ஒன்றுபட ஒற்றுமையுணர்வைத் தோற்றியோரும் ஒண்டமிழ்ப்புலவரே. பேகன் என்ற வள்ளற்கும் அவன் துணைவிக்கும் உற்ற பிணக்கினைப் போக்கி இணக்கம் செய்தோரும் இம் மொழிப்புலவரே. கோப்பெருஞ் சோழற்கும் அவர்தம் மக்களுக்குமுள்ள பகையென்னும் பண்பிலதனை நீக்கிப் பண்புடைமையை நிறுத்தியோரும் பைந்தமிழ்ப் பாவலரே

அன்னை மொழி ஆட்சி அகன்று அந்நியர்மொழி ஆட்சியில் தாய்மொழி பேசிடின் தன்னிலை குலையும் எனக்கொண்டு சேய் மொழிக்குச் செவி சாய்த்து வாயங்காந்து நிற்கும் வாய்ப்புறு காலம் வந்தெய்தியது. பாவலர் தம்மைப் பல்லக் கேந்திய காலம் போய் புலவர் என்னில் பொருட் படுத்தாப் புன்மை பொலிந்தது. அன்னை மொழி ஆட்சியில் அடையாவாயிலாயிருந்தது. அன்னியர் ஆட்சியில் தடைபலவுறுந்தன்மை எய்தியது.

மூவேந்தர் வளர்த்த முத்தமிழ் தலைச்சங்கம், இடைச்சங்கம் கடைச்சங்கம் ஆகிய முச்சங்கங்கள் முடிந்த பின்னர் அன்னியர் ஆட்சி, யில், கன்னித் தமிழ்மொழியைக் கற்பார் இழிந்து, காப்பார் இன்றி பொற்பிழந்து, நற்பாலவின்றி நலிவுற்றது. இன்ன காலையாகிய இருபதாம் நூற்றாண்டில் இன்றமிழ்மொழி எழிலுற, ஏற்றப்பெற ஆற்றல் அமைய, புறவிருளகற்றும் ஞாயிறு போன்று அகவிருள் அகற்றும் ஆற்றல் சால் அறிவுடைச்செம்மல் தோன்றினன். ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்குப்பின், அன்னைமொழி வளர, பின்னையோர் பேணிக் காக்க, பாண்டி நாட்டில் பாண்டித்துரைத்தேவர் 1886ல் தோன்றினர். பாலவனத்தம் குறுநில மன்னர் இராமநாதபுரத்து மன்னரிடத்து

மதிமந்திரியாய் மாண்புற்றிலங்கிய பொன்னுச்சாமித்தேவரின் பொற்புறு மகனாவார். கல்விக் களஞ்சியமாம் பாற்கரசேதுபதி மன்னரின் கண்ணனைய உடன்பிறப்புமாவர் தேவர் திருத்துறை நகர் பழநிக்குமார முனிவர் அவர்களிடத்துக் கல்விபயின்றார். அனந்தாழ்வான் எனும் முத்துச்சாமி அவர்களிடம் தமிழ்ப் பயின்றார் எனவும் கூறுப.

தேவரின் பண்பு நலங்களைப் பாவலர் பலரும் பலபடப் பகர்ந்து போயுள்ளனர். அன்பும் அருளும் அடக்கமும் அறிவும், ஊக்கமும் ஒழுக்கமும் உயர்சால் பண்பும் நாணும் பொறையும் நன்றாள் வினையுமாம் உடைமைகள் பத்தும் உடைமையாக் கொள்ளும் உரவோன், காட்சிக்கினிமையும் கடுஞ்சொலின்மையும் கொண்டு இன்சொலால் ஈத்துவக்கும் ஏந்தல். புவிக்கினிய பெருங்குணமும்; புகழ்க்கினிய பெருங்கொடையும் பெற்ற புரவலன். அஞ்சாநெஞ்சுடை ஆண்மையாளன்; அஞ்சுவது அஞ்சும் அறிவாளன். எண்பொருள வாகச் செலச்சொல்லி, பிறர்வாய்நுண்பொருள் காணும் நுண்ணுணர்வினன்; சென்றவிடத்தாற் செலவிடா தீதொரீஇ நன்றின் பாலுய்க்கும் நல்லறிவினன்; எவ்வதுறைவதுலகம் உலகத்தோடு அவ்வதுறையும் செவ்விய நெறியினன்; பிறிதோர் சொல்வெல்லுஞ் சொல் இன்மையறிந்து சொல்லும் சொல்லேருழவன்; கேட்டார்ப் பிணிக்கும் தகைமையும் கேளாரும் வேட்பமொழியும் மொழியாளன்; அருந்தமிழ்தேர் கலைஞர்களை ஆதரிக்கும், ஆர்வமுற்றோன்; கவிஞர் தம் கண்மணியாயிலங்கும் கண்ணுடையோன். ஏழை எளியோர்க்கு வாரி வழங்கும் வண்கையன்; பொற்பார் சங்கத்துப் புரவலாயிருந்து புலவராயும் பொலிந்தோர் போன்று புலனுழுதுண்ணும் புலவராயும் போற்றப்படுவோன்.

தோன்றிற் புகழொடு தோன்றுக என்ற ஆன்றோர் அருளுரைக் கிணங்க, ஈதலிசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியமில்லை உயிர்க்கு என்ற உரனுடையாளர் செறிவுரைக்கேற்ப, ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் செயலை, ஊன்றிய உணர்வால் உளுற்றத்தொடங்கினார். பாண்டிய நின்னாட்டுடைத்து நல்லதமிழ் என்ற ஈண்டிய கேள்வியின் இயல்பினைஓர்ந்து பாண்டியர் தலைநகர் மாடமதுரையின்கண் தமிழ்ச்சங்கம் ஒன்றை 1901ம் ஆண்டு மே திங்கள் இருபத்து நான்காம் நாளில் நிறுவினார். இச்சங்கம் மூவேந்தர் போற்றி வளர்த்த முச்சங்கங்களின் பின்னர் நான்காம் சங்கமென நாவலர்

பலரும் நாட்டில் நிலை நாட்டினர். தொடங்கிய காலத்தே சங்கத்தின் சிறந்த நோக்கங்களை சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் நெறியே குறிப்பிட்டுள்ளார்.

தனித்தமிழ் மாணவர்களுக்கும் ஆங்கிலத் தமிழ் மாணவர்களுக்கும் சங்கத்தார் தமிழில் தேர்வுகள் நடாத்தி அவற்றில் தேர்ச்சி பெற்றவர்களுக்குப் பரிசும் சான்றிதழும் அளித்தல்

தமிழ்மொழித் தொடர்பான நூலாராய்ச்சி மொழித்தோற்ற தத்துவ ஆராய்ச்சி முதலிய ஆராய்ச்சி செய்தல்

யாவாரலும் கொண்டாடப்பெறும் பயனுள்ள பழைய தமிழ் நூல்களை வெளியிடல். செந்தமிழ் என்னும் திங்களிதழை நடத்திவரல்:

வடமொழி ஆங்கிலம் முதலிய வேற்றுமொழிகளினின்றும் நூல்களை மொழிபெயர்த்துத் தமிழறிவை வளர்த்தல்

தமிழ்மொழியில் உள்ள நூல்களை ஆய்ந்து பிழையறப்பதிப்பித்தல்

மதுரையிலும் மற்ற இடங்களிலும் பொதுமக்கள் பயனுற தமிழ் நூல்கள் நிறைந்த நூல் நிலையம் அமைத்தல்.

செந்தமிழ்க் கல்லூரியை நடத்தி வருதல்.

மேற்கூறிய நோக்கங்கள் செவ்வன் நிறைவேறுதற்குப் பிற இடங்களிலும் கிளைச்சங்கங்களை நிலைநாட்டுதற்கு வேண்டுவன செய்தல்.

சங்கப்புலவர் தழைத்தினிதிருக்கும் மங்கலப்பாண்டிவள நாட்டிலே மதுரையில் தோற்றிய தமிழ்ச் சங்கத்தே **செந்தமிழ்** என்னும் திங்களிதழும் சேதுபதி கலாசாலையும் தேவர் அன்புடன் வளர்த்த அருஞ்செல்வங்களாம். தேவர் தம் உடல் பொருள் ஆவி மூன்றினாலும் அவ்விரு செல்வங்களும் நாடோறும் வளர்ந்து வந்தன. முச்சங்கங்கள் முடிந்த பின்னர் நலிவுற்ற நற்றமிழ் நலம் பெற்று வளர்ந்து வருதலை உணர்ந்த நாட்டார் நான்காம் சங்கம் என்று நவின்று நானிலம் போற்ற நாட்டினர்.

பைந்தமிழ் வளர்க்கும் பாண்டியர் வழியின் பின்னர் பாண்டித் துரைத்தேவர் மொழி வளர்க்கும் நோக்கொடு தமிழ்ச்சங்கம் தோற்றி

னார். தமிழாய்ந்த சங்கமிருந்த தமிழ் மதுரையின்கண் சங்கமில்லாக் குறையைப் போக்கியதோடு அக்காலச் சூழ்நிலைக்கேற்பத் தமிழை வளர்த்தார் தேவர். நாற்றிசையும் நாட்டிய நற்றமிழ்ச் சங்கமெல்லாம் நாடிச்சென்று நல்லுரை நவின்று பகையென்னும் பண்பிலதனைப் பாரினில் அகற்றப் பண்புரை வழங்கி நீதிபல புகன்று அமைதி காக்கும் அழியாப் புகழ் பெற்றவர் தேவர். நாடிவந்த புலவர்களை அகத்தே உவகை பூப்ப அன்புடன் முகமன் ஆற்றி, பாடிவந்த பாக்களின் பண்பறிந்து, தகுதி நோக்கி வரிசையறிந்து பரிசு வழங்கும் வள்ளலாவர் மன்னரிற்கற்றோர் சிறப்புடையோரெனும் மாண்புரை பாட்டினிற் கேட்டதனை நாட்டினிற் கண்ணாற் காண, நண்ணுவழி இருந்து நாவலரை நற்றமிழ்ச் சங்கத்தே கூட்டி வைத்துப் பொருளுரை போற்றும்புரவலர், காணவருவாரை இன்று போய் நாளைவாவென நவின்று நவிவுறுத்தாமல் ஊணருந்தும் வேளையினும் உள்ளன்போடு வரவேற்று உரையாடி வேண்டும் உதவிபுரிந்து விடுக்கும் வினைஞராவார்

செந்தமிழ் மதுரைத் தமிழ்ச்சங்கம் தோற்றியவரும் தலைவருமாகிய பாலவனத்தம் குறுநில மன்னர் திரு பாண்டித்துரைத்தேவரவர்கள் 1902-ம் ஆண்டிலே செந்தமிழ் என்ற திங்கள் இதழைத் தோற்றுவித்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும் விழாக்களில் தமிழகக்கலைஞர்களின் கருத்துரைகளை நேரிற்கண்டும் கேட்கும் கேள்விச் செல்வம் பெறவியலாதவர்களும் பெற்றுப்பயனடைய செந்தமிழ் தோன்றியது. அன்றியும் தமிழகப் புலவர்களும் அறிஞர் பெருமக்களும் அயல் நாடுகளில் உள்ள தமிழறிஞர்களும் தங்கள் கருத்துக்களை வெளியிட்டுப் பிறர் உணர்த்தவும் உணரவும் வேண்டிச் செந்தமிழ் தோற்றுவிக்கப்பட்டது. சான்றோர்களின் சால்புரைகள் அறிவிக்கவும் அறியவும் வேண்டித் தோற்றுவிக்கப்பட்டது. செந்தமிழ்க்குரிய கருத்துரைகள் அமைய வேண்டிய முறையினையும் செந்தமிழ் வெளியீடு அக்கால நிலைக்கேற்ப அமைத்தும் போற்றிவந்துளது. யாவராலும் கொள்ளத் தக்கதாயும், படிப்போர்க்கு அரிய பொருளின் புதிய உணர்ச்சி உண்டாக்க வல்லதாயும், சொற்சுவை பொருட்சுவை மலிந்த தொடருடையதாகவும், தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஏற்றதாகவும் ஒருவராலும் வெறுக்கப்படாததாகவும் இருத்தல் வேண்டும். இம்முறையில் வழுவிவருவன செந்தமிழில் வெளியிடத்தகாதனவாயுள்ளன. ஆதலால் அம் முறையில் வழுவாது எழுதப்பெறும் தமிழ் இலக்கிய இலக்கண ஆராய்ச்சிகளும் சாத்திர ஆராய்ச்சிகளும், வரலாற்று

ஆராய்ச்சிகளும், மொழிபெயர்ப்புக்களான இயற்பியல், தாவரவியல், உயிரியல், உடலியல், தருக்க நூல், கணிதநூல் முதலியவற்றின் பொருளுரைகளும் உலக நன்மைக்குரிய பலவுமே **செந்தமிழில்** வெளிவரத்தக்கன.

எழுதி வெளியிடும் பொருளுரைகளில் ஒரோவழிப் பொருந் தாமை இருப்பின் அதனைக் கண்ணுறும் புலவர் பொருத்தமுள்ளது காட்டித்திருத்தவும் அல்லது அதனை மறுத்து உண்மைப் பொருளை நிறுத்தவும் புகுவது தக்கதேயாம். முன்மொழியும் பொருளுரையில் உள்ள பொருந்தாமை தீரத் திருத்தியும் உண்மைப் பொருளைத் திருத்தியும் திரிவுணர்வுக்கும் திறனுடையது ஆதலால் இப்பொருளு ரையையும் **செந்தமிழ்** விரும்பத்தக்கது. எழுதி வெளியிடும் வாதுரை யானது முன்மொழிதலின்று எடுத்துக்கொண்ட விவாதப்பொருளைக் கடிதற்குப் போதுமான வலியிலதாயினும் அல்லது முன்மொழிதல் நிலைபெறுதற்குப் போதிய சாதனங்கள் பிறவும் உள்ளனவாயினும் அவற்றை எல்லாம் எடுத்துரைத்துத் தன்துணிவு நிலைபெறச் செய்வது முன் மொழிதற்குக் கடமையாகின்றது அக்கடமை தீர்த்தற் பொருட்டு முன் மொழிதலுடையார் சீற்றம் சிறிதும் கொள்ளாது வாதிக்கு எதிரியாய் நின்று எதிருரை என்னும் பொருளுரை எழுதி வெளியிட விரும்புவராயின் அதற்குத் தமிழ் இடங்கொடுக்கவேண்டு மென்பது இன்றியமையாததே.

விவாதப் பொருளைத் தெளிவுற விளக்குதற்கு வாதுரை எதிருரைகளே சாலும். அங்ஙனம் அமையாது எதிருரை மேல் வாதுரையும் அதன்மேல் எதிர் உரையும் ஆக மாறி மாறி நிறித்து மறித்தும் பொறித்து விடும் பொருளுரை வரபின்றி முடிவது செந்தமிழ் அன்பர்களுக்கு வெறுப்பை விளைக்கும்.

செய்யுளாகவேனும் உரைநடையாகவேனும் எழுதப்பெற்ற பழையநூல்களாயினும், புதிய நூல்களாயினும் செந்தமிழ் வாயிலாக வெளியிட விரும்புவோர் பிழையற, தெளிவுற எழுதி அனுப்பவேண்டும். இன்னோரன்ன முறைகளையும் கடப்பாடுகளையும் கொண்டு செந் தமிழன்பர்கள் பொருளுரை வழங்கியமையின் சிறப்பாகவும் செம்மை யாகவும் பயனுள்ளனவாகவும் அமைந்து வரலாயிற்று.

செந்தமிழ் 1902ம் ஆண்டுப் பாண்டித்துரைத்தேவர் அவர் களால் தொடங்கப்பெற்றுத் தமிழ்த் தொண்டாற்றும் தகவோடு

பல்வேறு நோக்கங்களோடு பல்வேறு நிலையில் உள்ளாரும் தமிழ் வளம் பெறும் குறிக்கோள் ஒன்றினால் ஒன்றுபட்டு உழைத்தமை அறியப்படும். நோக்கம் பலவாயினும் நோக்குடையார் எவராயினும் குறிக்கோள் ஒன்றெனக் கொண்டு அவரவர் பண்பறிந்தாற்றும் பாண்டித்துரைத் தேவரவர்களின் பண்பாட்டாலும் வந்தவாக்கின் முகந்தந்து இன்சொலியம்பி இனிதீனும் ஏற்றத்தாலும் வருவாரை எதிர் நோக்கும் வண்மையாலும் புலவர்களின் புலனுறு பொருளுரை செறிந்த செந்தமிழ் நாளொரு நிலையும் பொழுதொருநெறியும் பெற்றிலங் கியது. தேவர் தாமே தமிழ்ப்பழஞ்சரிதம் என்னும் கட்டுரைவாயிலாக அரிய ஆய்வுக் கருத்தினை வெளியிட்டுள்ளனர். அதனுள் தமிழ்க் குடிகள் காலத்தால் வேறுபட்ட கருத்துரைகளை ஞாலத்தார் நாட்டங் கொள்ள நாட்டிப் போயினர். ஆரியர் புகுமுன் இந்நாட்டில் பூர்வ குடிகள் இருந்தனர் எனவும், அவரை அவ்வாரியர் வென்றடக்கி வந்தனர் எனவும் வேத மந்திரங்கள் தெரிவிக்கின்றன. இப்பூர்வகுடிகள் முன்பு பரதகண்டம் எங்கும் பரவியிருந்த தமிழரே என்பது சரித்திர அறிஞர் பலருடைய துணிபு சாதிப்பிரிவேற்பட்ட காலத்தில பிரம க்ஷத்திரிய வைசியர் என்பவர் தம்மவராதலால் அவர் வேதம் ஓதல் முதலிய ஆரியாசாரத்துக்குரிய ''துவிசர்'' எனவும் இந்நாட்டுப் பூர்வகுடிகள் தம்மினத்தர் அன்மையால் அம் மூவர்க்கும் அடிமைத் தொழில் செய்தற்குரிய நான்காம் சாதியினர் எனவும் ஆரியர் வகுத்துக் கொண்டனர். இவர்கட்கு ''சூத்திரர்'' என்ற பெயர் ஏற்பட்டதோடு அடிமைத்தொழிலன்றி வேறு எவ்வித மேம்பட்ட தன்மைக்கும் அவர் உரியர் அல்லர் என்றும் ஆரியர் விதித்தனர். முன்னாளில் ஆரியவர்த்தம் என்பது இமயவிந்திய மலைக்கிடையிற் கங்கை யமுனை பாயும் பிரதேசமென்றும், அப்பரிசுத்த பூமியை நீங்கி விந்தியத்தின் தென்பாகம் அபரிசுத்த நாடுகட்குச் சென்று வரும் ஆரியன் அப்பாவத்திற்காகப் ''புனஸ்தோமம் அல்லது சர்வபிரஷ் டோமம்'' செய்துகொள்ளக் கடவனென்றும் ஆரிய ஒழுக்க நூல்கள் விதிக்கின்றமையால் திராவிடதேசம் முற்காலத்தில் ஆரியர் புகுந்தறி யாததென்பது தெளிவாம்; இவ்வாறு தேவர் தம் கட்டுரையில் குறித் துள்ளமை அறியப்படும்.

செந்தமிழ் தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஏற்றதாக இருத்தல் வேண்டும் என்ற முறையை இதழாசிரியர் இயம்பியுள்ளனர். அதற் கேற்ப சங்கங்களின் காலம், நூல்களின் காலம், இயற்றிய புலவர் களின் காலம், இலக்கிய இலக்கணம் பற்றிய ஆராய்ச்சி, தலமுறை

பற்றிய ஆராய்ச்சி, சமயம், தமிழ் இலக்கங்கள், ஓரடிச்சொற்கள்' தமிழ்த்தொண்டு செய்தோர், பெண்ணின் பெருமை, உரையாசிரியர், மதுவிலக்கு, விவசாயக் குறிப்பு, குறள்பற்றிய ஆராய்ச்சி, சிலாசாசனம், என்று இன்னோரன்ன பல தலைப்புக்களில் பாங்குற மொழியும் பான்மைத்து செந்தமிழ் மேலும் நூல்வெளியிடு தலையும் மேற்கொண்டிலங்கியது.

செந்தமிழிதழ் தோன்றிய அக்காலச் சூழ்நிலையையும், கட்டுரையாளர்களின் உள்ளப் போக்கை அறிவிக்கும் நெறியில் அதன்கண் காணப்படும் கட்டுரைத் தலைப்புகளும், பெயர்களும் அமைந்திலங்கும் தனித்தமிழ்த் தொடர்களை தக்காங்கு எடுத்துரைக்கும் ஆர்வம் அறிவிக்கும் நிலையில் பல பொருளுரைகள் காணப்படினும், வேற்று மொழிச் சொற்களாலான பொருளுரையும், சிறப்பாக வடமொழிச் சொற்களாலான தலைப்புக்களும் நிலைபெற்றுள்ளன. அக்காலச் சூழ்நிலை அந்நெறியே தமிழ்மொழி வளர்க்கும் தகுதியைப் பெற்றது போலும். தமிழ்ப்பத்திரிகை என்றும் பத்திராதிபர் என்றும் பெயர் குறித்தமையே போதிய நிலையை எடுத்துக்காட்டு மெனில் கட்டுத்தலைப்புக்கள் வடமொழித் தொடரால் அமைந்தமை அக்காலத்து வியப்பாகக் கொள்ளுமாறில்லை; கருதப்படவுமில்லை.

செந்தமிழ் இதழில் காணப்படும் கட்டுரைத் தலைப்புகளில் சிலவற்றைக் காணலாம். அங்கச் சேதனசாஸ்திரம் பிராசீனதர்மங்களின் உயர்வும் இக்கா ஆசாரங்களும், ஆசங்கை மாஸ்திகள், வானசாஸ்திரம், இந்து சாகப க்ஷகனாயிருப்பதேன், தவம்புரியும் சில ஜீவஜந்துக்கள், அபிப்பிராயபேதம், ஆராய்ச்சி அக்ஷேபம், உபாத்திமைத் தொழில், சாங்கிய கீதோபதேசம், சாதுரியவசனம், ஒரு நிருபவிடயம், சுதர்ம கலாவதீயம், சுத்தாத் துவித சைவ சித்தாத்த மகத்துவம், பக்தி வைபவம் ஒரு விக்ஞாபனம், திவ்ய பிரபந்த திவ்வியார்த்த தீபிகை, அசோகன் ஆக்ஞா பத்திரங்கள், சாசனபரீக்ஷை, தமிழபிவிருத்தி, நாநாதேசவிவாக முறை, வித்யாபரிபாலன சங்கம், மாகீர்த்தி நாமநிரூபணம், ஸ்மஸ்க்ருதவ்ருத்த மஞ்ஜரி, பதார்த்ததீபிகை, பாரததேசபூர்வ ராஜாங்கம், என்றின்னோரன்ன கட்டுரைகளின் தலைப்புக்களைக் கொண்டு அக்காலச்சூழ் நிலை, தமிழ்வளர்ச்சியில் எவ்வாறு இருந்ததென அறியலாகும். கட்டுரைகளே இன்ன பெயர்களைப் பெற்றிலங்கின் கட்டுரையில் சொல்லாட்சியின் நிலையினைச் சொல்ல ஒல்லுமோ? காலப்போக்கில் கருத்துஉரு மாற்றம் பெறுதல் இயற்கையே.

இயற்சொல் திரிசொல் திகைச்சொல் வடசொல் அனைத்தே செய்யுள் ஈட்டச்சொல் எனத் தொல்காப்பியர் கூறியிருப்பினும் அவரே வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல் லாகும்மே எனவும், சிதைந்தனவரினும் இயைந்தன வரையார் எனவும் இயம்பிப் போந்தமைமையும் இனிதே உணர்ந்து கோடல்வேண்டும். மேலும் மரபுநிலைதிரியா மாட்சியவாகி எனவும், தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து அதர்ப்படயாத்தலோடு அனைமரபின எனவும் அவரே மரபியற்கண் மன்னுதலுறக் கூறிப் போந்தனர். இன்னோரன்ன கருத்துக்களை அக்காலச் செந்தமிழ் இதழாசிரியர்கள் சிறப்பாகவும் செம்மையாகவும் உண்மையாகவும் உள்ளத்தில் தெள்ளிய நெறியில் உணர்ந்தவர்களே. எனினும் அவர்காலத்துச் சூழ்நிலையில் வடசொல் கலந்த தொடர் நிலையால் வழங்க வேண்டிய காலமாக இருந்ததென உணரவேண்டும். அந்நிய மொழி ஆட்சியில் அமைந்த நிலை என்றும் அறிந்துணர்ந்து கோடல் அறிவுடையோர் நெறியாம் என்ப.மேலும் வேற்றுமொழிச் சொற்களை விரவக் கூறும் நிலை ஏற்படுங்கால் தமிழ் மொழியின் எழுத்தொலிக் கேற்ப அமைத்துக்கூறல் ஏற்புடையதொன்றாம்.

சுதந்தரம் பெறாத அந்நிய மொழி ஆட்சியில் அன்புத்தமிழ் அமைந்தவாற்றினைக் கண்டோம். ஆயின் உரிமைபெற்ற இக் காலத்தில் தமிழ்மொழி பழைமையின் சிறப்பு ஒருபுறம் காணப்படினும், புதுமையின் பொலிவும் பல்வேறு துறைகளில் போற்றப்படும் நெறியை உணரலாகும், புதுமைக் கவிஞர்களால், புதுமைக் கவிகளைக் காண் கின்றோம். உரைநடையோ எளிய முறையில் எல்லோரும் அறியும் முறையில் காணப்படுதல் ஒருபுறம். எளியமுறை என்ற ஒன்றினாலே எதனையும் எடுத்துரைக்கலாம் என்ற கொள்கையர் ஒருபால்; மற்றொ ருபால் எதனை எடுத்துரைத்தால் எப்படியும் வாழலாம் என்பதும் ஒரு முறை. கவர்ச்சியான உருவங்களை அமைத்துப் பொருளைக் கவர்தல் மற்றொருமுறை. அந்நியர் ஆட்சியினும் நந்நிலை ஆட்சியில் அந்நிய மொழியாம் ஆங்கிலச் சொற்களை அள்ளித்தெளித்து, ஆர்வமுறும் கதையென அறிவித்து, கவர்ச்சி தரும் உருவங்களைக் காட்டி வெளி வரும் புதினக்கதைகளாம் உரைநடையினைப் போற்றும் போக்கையும் காணலாம்.

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினோராம் ஆண்டு தோன்றிய கரந்தைத் தமிழ்ச்சங்கம் தன்னை வளர்த்த புரவலர் தமிழவேள் உமா மகேசுவரனார் அவர்கட்குச் சுமார் பத்து ஆண்டுகட்கு முன்னர்

நினைவுச் சின்னமாகச் சிலைஎடுத்து அன்றைய தமிழக அரசின் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களால் திறப்புவிழா நடாத்திப் புகழ் கொண்டது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஒன்றாம் ஆண்டுத் தோற்றிய மதுரைத் தமிழ்சங்கம் தன்னை வளர்த்த புரவலர் பாலவனத்தம் குறுநில மன்னர் பாண்டித்துரைத்தேவர் அவர்கட்கு நினைவுச் சின்னமாக சிலை வைத்து 1981-ம் ஆண்டு மதுரையில் நிகழ்ந்த ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது தமிழக அரசின் அன்றைய முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களால் திறப்பு விழா நடாத்திப் புகழ்பெற்றது அறிந்து பாராட்டுகிறோம்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் நான்காம் தமிழ்ச்சங்கமென நாவலரால் நாட்டப்பெற்று நாட்டாரால் போற்றப்படுகின்றது. நான்காம் தமிழ்ச் சங்கச் சார்பில் செந்தமிழ் என்னும் திங்களிதழும் சேதுபதி கலாசாலையாம் தமிழ்க் கல்லூரியும் வலிவும் பொலிவும் பெற்றுத் இப்போது இயங்கிவருகின்றது, இவையிரண்டும் தேவரால் வளர்க்கப்பெற்ற அருஞ்செல்வங்களாம். இவ்விரு செல்வங்களையும் தமிழக அரசு போற்றி வளர்க்க வேண்டும். உதவிகளைப் புரிதலே ஆற்றலும் ஏற்றமும் உடையவொன்றாம்.

நூல் மதிப்புரை

சித்தர்களும் சமூகப் பார்வையும்

(ஆசிரியர் : டாக்டர் இளமதி சானகிராமன்; வெளியீடு: குறிஞ்சி பதிப்பகம், டி 9 ஆசிரியர் குடியிருப்பு, ஆர். வி. நகர். புவக்துவைப் பல்கலைக்கழக வளாகம். சின்ன காலாப்பட்டு. புதுச்சேரி–14; பக்கங்கள்: 139; விலை : ரூ. 20-00)

டாக்டர் இளமதி சானகிராமனின் 'சித்தர்களும் சமூகப் பார்வையும்' என்ற இந்நூல் மிக அரிதின் முயன்று எழுதப்பட்டிருக்கும் ஆய்வு நூலாகும். தமிழில் சித்தர் இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகள் மிகவும் குறைவாகவே உள்ளன; மிகக் குறைவான எண்ணிக்கையில் அமைந்த ஆய்வுகளுள் இந் நூல் குறிப்பிடத்தக்கது.

'சித்தர்கள் — ஒரு பார்வை', 'சித்தர்கள்—வரலாற்றுப் பார்வை', சித்தர்களின் சமூகப் பார்வை' என்ற மூன்று இயல்களாக இந்நூல் அமைந்திருக்கின்றது. சித்தர்களைப் பற்றிய செய்திகளை இந்நூல் மிக அழகாக வகைப் படுத்தித்தருகிறது. நூல் நெடுகிலும் ஆய்வாளரின் கடின உழைப்பும் ஆர்வமும் பயிற்சியும் புலனாகின்றன.

'சித்தர்கள்-ஒரு பார்வை' என்ற முதல் இயலில், சித்தர் என்ற சொல்லின் பொருள், அதன் வேர்ச் சொல், சித்தர் என்ற சொல் சங்க இலக்கியங்களிலும் காப்பியங்களிலும் பயின்று வருதல், சித்தர்களைப் பற்றி இன்றைய ஆய்வாளர்கள் கூறும் கருத்துக்கள், சித்தர்களின் எண்ணிக்கை முதலியன பல செய்திகள் தெளிவுடனும் நுட்பத்துடனும் நூலாசிரிரால் விளக்கப்பட்டுள்ளன. கருத்துக்களை மிகவும் நுட்பமாத் திரட்டியும் வகைப்படுத்தியும் நூலாசிரியர் கூறியுள்ளார்; வறிதே திரட்டுதலும் வகைப்படுத்துதலும் ஆய்வாகி விடாது; திரட்டப்பட்ட தரவுகளின் மூலம் சில பொது உண்மைகளைக் கண்டறிந்து கூறுவதுதான் ஆய்வு; ஓர் ஆய்வாளனின் கடமையும் அதுதான். இந்நூலாசிரியர் சிறந்த ஆய்வாளர் என்பதற்குச் சான்றுகள் பல இந் நூலில் காணப்படுகின்றன. சித்தர்

களைப் பற்றிய செய்திகளைத் தொகுத்துக் கூறி, இறுதியில் சில பொது உண்மைகளைக் கூறுகிறார்.

'சித்தர்கள் வரலாறு' என்ற இரண்டாம் இயலில், அகத்தியர் முதலாக வால்மீகர் ஈறாக 21 சித்தர்களின் வாழ்க்கை வரலாறுகள் மிகத் தெளிவாக எடுத்துக் கூறுப்பட்டுள்ளன. ஒவ்வொரு சித்தரையும் பற்றி, அவரது தனி வாழ்க்கை. சித்த நிலைக்கு அவர்கள் மாறிபழல் அவசூர்களது இலக்கிய இலக்கணப் படைப்புக்கள். அவர்களைப் பற்றிய ஏனைய சித்தர்கள் கூறிய கருத்துக்கள். சமுதாயத்திற்கு அவர்கள் ஆற்றிய தொண்டு என்ற நிலைகளில் கருத்துக்களை வரன் முறையாகக் கூறிச் செல்கின்றார் நூலாசிரியர்.

'சித்தர்களின் சமுதாயப் பார்வை' என்ற மூன்றாவது இயலில் பாடல்களின் வழிப் புலனாகும் சமுதாயம். சமுதாயத்திற்குச் சித்தர்கள் கூறும் அறிவுரைகள் என்ற இரண்டு கோணங்களில் கருத்துக்கள் விளக்கப்படுகின்றன.

கருத்துக்களைத் எளிவான முறையில் பாகுபடுத்திக் கூறுதல், தரவுகளைப் பல்வேறு மூலங்களிலிருந்து திரட்டுதல், கடின உழைப்பு ஆகியவற்றில் ஆய்வாளர் பெற்றிருக்கும் பயிற்சி இந்நூலில் புலப்படுகின்றது.

டாக்டர் ம. திருமலை

நோயின்றி வாழ்வது எப்படி?

ஆசிரியர்: டாக்டர் புலவர் பெ. கிருட்டிணன்; வெளியீடு : பூவழகி பதிப்பகம், 29/2 சீனிவாசப் பெருமாள் சன்னதித் தெரு, இராயப் பேட்டை, சென்னை-14; பக்கங்கள் : 172; விலை : ரூ 18–00).

இந்நூலில் 38 இயல்கள் அமைந்திருக்கின்றன. இதில் தலைவலி முதலான சிறிய நோய்கள் முதல் மாரடைப்பு, எய்ட்ஸ் முதலான பெரிய நோய்கள் வரை மொத்தம் 22 நோய்கள் பற்றிய விவரங்களும் அவற்றைத் தவிர்க்கும் முறைகளும் அவற்றுக்குரிய மருத்துவ முறைகளும் இந்நூலில் கூறப்படுகின்றன. முதலில் அமைந்துள்ள, சில இயல்களில் உடலின் சிறப்பு, உடலைப் பேணுவதன் இன்றியமையாமை நோய்களின் தன்மை முதலிய செய்திகள் கூறப்படுகின்றன.

மனித உடல் உழைப்பதற்காகவே வடிவமைக்கப்பட்டது. எனவே உழைப்பு உடலை உறுதியாக வைக்கிறது என்பதையும் உழைக்கும் வாய்ப்பு இல்லாதவர்கள் உண்ணாநோன்பினை அடிக்கடி மேற்கொண்டு உடலை ஓம்ப வேண்டும் என்பதையும் நூலாசியரிர் வற்புறுத்துகின்றார்.

மனித உடலில் ஏற்படும் நோய்களின் தன்மைக்கு ஏற்ற வகையில் வைத்திய முறைகளை மேற்கொள்ளவேண்டும். ஒரே மருத்துவ முறையைப் பின்பற்றுவதைவிட இது மிகவும் நல்லது என்ற உண்மையை இந்நூலாசிரியர் விளக்குவது சிறப்பாக உள்ளது.

'சித்த மருவத்தின் சிறப்புக்கள்' என்ற இயலில் நூலாசிரியர் விளக்கியுள்ள செய்திகள் மிகவும் பயனுடையவை.

இந்நூலாசிரியர் ஒரு நோய்க்குரிய மருந்துகள் பற்றிக் குறிப்பிடும்போது, சித்த வைத்திய முறையையும் அதற்கு இணையான ஆங்கில வைத்திய முறையையும் விளக்குவது குறிப்பிடத்தக்கது. ''பக்க விளைவுகள் (reactions and side effects) இல்லாமல் பயன் தரக் கூடியது சித்த மருத்துவ முறையாகும்'' என்று இந்நூலாசிரியர் குறிப்பிடுவது இன்றி நடைமுறையில் காணப்படுகின்ற அனுபவ மாகவே உளது.

சித்த மருத்துவத்தின் இன்றியமையாத கூறு உணவாகும், உணவையே மருந்தாகவும் மருந்தையே உணவாகவும் காட்டுவது இம்மருத்துவ முறையின் சிறப்பாகும் இதற்கேற்றவாறு இந்நூலா சிரியரும் ஒவ்வொரு நோயைப் பற்றி விளக்கும் போதும், மருந்து களுடன் உணவைப் பற்றியும் கூறி விளக்குகிறார். சான்றாக, காமாலைலை நோய் பற்றிக் கூறும் போது மருந்துகளுடன் உணவு முறைகள் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

பல நோய்கள் பற்றிக் குறிப்பிட்டு அவை வராமல் தடுப்பதற் குரிய மிக எளிமையான வழிமுறைகள் பற்றிக் கூறுகிறார் இந்நூலா சிரியர். கருத்துக்களை ஒரு நல்லாசிரியரைப் போல் மனங் கொள்ளு மாறு விளக்குகிறார். தேவையான இடங்களில் இலக்கிய மேற்கோள் களையும் காட்டுகின்றார். சுருங்கக் கூறின் நமது உடல் நலம் பற்றிய கையேடாக இந்நூல் அமைந்திருக்கிறது. அனைவர் கையிலும் இருக்க வேண்டிய நூல்.

டாக்டர் ம. திருமலை.

நினைவு அஞ்சலி

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் முன்னாள் செயலரும் (1984–89) தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினருமான காலஞ்சென்ற என். எஸ். முத்துமலைச்சாமி பி.ஏ., பி.எல்., அவர் களின் உருவப்படத்திறப்பு விழா 20-12-91 ஆம் நாள் சங்க வளா கத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குப் புதுக்கோட்டை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. தியாகராச காடுவெட்டியார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். தமிழ்ச்சங்கச் செயலர் திரு. மா. தனுக் கோடி பாண்டியன் பி.ஏ., பி.எல்., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

தலைவர் திரு. தியாகராச காடுவெட்டியார் தமக்கும், அமரர் என். எஸ். முத்துமலைச்சாமிக்கும் இருந்த தொடர்பு, தம்மை ஆதரித்த பெருந்தன்மை ஆகியவற்றைக் குறிப்பிட்டுப் பேசினார். செந்தமிழ்க் கல்லூரிச் செயலர் திரு. மா. சங்கரபாண்டியன் பி.ஏ.,பி.எல்., அவர்கள் சிறப்பு விருந்தினர்களுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

T. 4811

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் டாக்டர். ச. அகத்தியலிங்கம் அமரர் என். எஸ். முத்து மலைச்சாமி அவர்களின் உருவப்படத்தை திறந்து வைத்து அரிய தொரு சொற்பொழிவு நிகழ்த்தினார். தாம் துணைவேந்தராய் இருந்த காலத்தில் என். எஸ். முத்துமலைசாமி தமக்குப் பல்கலைக் கழகத்தில் வலதுகரமாய் இருந்து ஆற்றிய அரும்பணிகளைக் குறிப் பிட்டார்கள். மேலும் அவருடைய நேர்மை, காலந்தவறாமை, கடமை, ஆசிரியர்கள், அலுவலர்கள் ஆகியோரிடம் அவர் கொண்டிருந்த பரிவு தமிழ், ஆங்கிலப் புலமை ஆகியவற்றைக் குறிப்பிட்டுப் பேசினார்கள்.

பின்னர் நினைவு அஞ்சலி உரையில் டாக்டர் நா. பாலுசாமி, முக்குலத்தோர் சங்கச் செயலர் திரு. பரங்குன்றம், முதலியோர் அமரரின் நல்லியல்புகளைப் பாராட்டினார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் திரு. மெய்யப்பன் தமிழ்ச்

சங்கத்தில் ஓர் அறக்கட்டளை நிறுவி அதற்கு முதல் தவணையாக ரூ. 5000/- (ஐயாயிரம்) தருவதாகக் கூறி, அமரரின் நற்குண நற்செய்கைகளைப் பாராட்டினார். அமரரின் இளைய வழக்கறிஞர் திரு. மனோகரன் தமக்குள்ள தொடர்பினைக் கண்ணீர் மல்கக்கூறி மனம் உருகினார்.

நினைவு அஞ்சலி உரைக்குப்பின் மதுரைத் தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு உறுப்பினர் திரு. அ. சாமிஐயா நன்றி கூறினார்.

மதுரைத் தமிழ்ச்சங்கச் செய்திகள்

தமிழ்த் தேர்வு பற்றிய அறிக்கை

பேரன்புடையீர்,

வணக்கம். பெரும் கொடைவள்ளல் பாண்டித்துரைத் தேவர வர்களால் 1901-ல் மதுரையில் நிறுவப்பட்ட நான்காம் தமிழ்ச்சங்கம். அவர்களின் நெறிமுறையில் வழுவாது தமிழுக்கும் தமிழ்ச் சமுதாயத் திற்கும் பணிபுரிந்து வருகின்றதென்பதனை தமிழ் நெஞ்சங்கள் நன்கறியும். இச்சங்கத்தின் மூலம் பண்டித பட்டம் பெற்றோர் பலர். அவர்களில் பலர் வானுயர் புகழுடன் வாழ்ந்து வந்தனர், வாழ்ந்தும் வருகின்றனர். இப்போது இத்தமிழ்ச் சங்கத்தாரால் நடத்தப்படும் செந்தமிழ்க் கல்லூரி, பல்கலைக்கழக இணைப்பினைப் பெற்று இளம் இலக்கியம், இளங்கலை, முதுகலை, எம்ஃபில் ஆய்வு வகுப்பு ஆகியவற்றினை நடத்திவருகின்றது. பாண்டித்துரைத் தேவரவர்கட்கு மதுரையின் மையப்பகுதியில் திருவுருவச் சிலை ஒன்றுள்ளதனை பலரும் அறிவர்.

கடந்த 90 ஆண்டுகளாக பள்ளி மாணவர்கள் தமிழ்த்தேர்வில் உயர்மதிப்பெண் பெற தமிழ்த் தேர்வினை எழுதி வருகின்றனர். அரசினரின் பாடத்திட்டத்தின்படியே வினாக்கள் கொடுக்கப்பட்டு விடை காணச் செய்து பரிசும், தகுதிச்சான்றும் வழங்கி வருகின்றோம்.

இவ்வாண்டும் நடைபெறும் தேர்வில் மிகுதியான (பத்தாம், பன்னிரண்டாம் வகுப்பு) மாணவர்களை கலந்துகொள்ளச் செய்து நற்பயன் காண ஊக்குவிக்க தலைமையாசியர்களையும், தமிழாசிரியர் களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

தேர்வுக் கட்டணமும் தேர்வு நடைபெறும் தேதியும்

	கட்டணம்	நாள்	நேரம்	
பன்னிரண்டாம் வகுப்பு	5.25	25-1-92	முதல் தாள்	10–1
பொதுத்தமிழ்			இரண்டாம் தாள்	2–5
சிறப்புத்தமிழ்	2.75	27-1-92		10-1
மெட்ரிக் பத்தாம் வகுப்பு	5.25	25-1-92	முதல் தாள் இரண்டாம்தாள்	10-12.30 2-4.30
பத்தாம் வகுப்பு (S.S.L.C)	5.25	8-2-92	முதல் தாள் இரண்டாம்தாள்	10-12 30 2-4.30

கட்டணம் அனுப்பவேண்டிய கடைசி நாள் 14–12-91

(குறிப்பு) தேர்வு நடத்துவதற்கான செலவாக 15 விழுக்காடு கழித்துக் கொண்டு மீதித்தொகையை கேட்புக் காசோலை (Demand Draft) அல்லது காசோலை (Cheque) மூலம் செயலர், மதுரைத் தமிழ்ச்சங்கம், 54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை-625 001 என்ற முகவரிக்கு அனுப்புக.

விடைத்தாள்கள் திருத்தும் தமிழாசிரியர்கட்கு தாள் (பொது) ஒன்றிற்கு ரூ. 1.25 வீதமும் சிறப்புத் தமிழ் விடைத்தாளிற்கு ரூ. 1.50 வீதமும் அன்பளிப்பு அளிக்கப்படும்.

தங்கள் பள்ளியில் தேர்வில் கலந்துகொள்ளும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கையை தயவு செய்து முன்கூட்டியே அறிவிக்க வேண்டுகின்றோம். அதற்கான படிவம் இந்த இதழின் கடைசிப் பக்கமாகும். அப்பக்கத்தைத் தனியாக எடுத்து பூர்த்தி செய்து அனுப்பவும்.

தமிழ்ச்சங்கத் தேர்வு நடத்த தமிழக, பாண்டிச்சேரி அரசுகளின் ஆணையுண்டு.

தேர்வு பற்றிய தொடர்புகள் அனைத்தும் செயலருடன் தான் இருத்தல் வேண்டும்.

தலைவர் செயலர்

இராமநாதபுரம் சேதுபதி மகாராணி

நு. இந்திராதேவி B.A. மா. நு. பாண்டியன்

தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை

அனுப்புநர் ;

____

____

____

பெறுநர் :

செயலாளர் அவர்கள்
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை.625 001.

ஐயா,

எங்களுடைய உயர்நிலைப்பள்ளி / மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் நம்முடைய தமிழ்ச் சங்கத் தேர்வில் தோரயமாகக் கீழே குறிப்பிட்டுள்ள விவரப்படி கலந்து கொள்வார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். நீங்கள் அனுப்பி இருந்த மாணவர் பெயர்ப் பட்டியலையும், தேர்வு பற்றிய பிற குறிப்புகளையும் எங்கள் பள்ளித் தலைமை ஆசிரியர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டேன்.

விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர்களின் எண்ணிக்கை__________

வகுப்பு	மாணவர்களின் எண்ணிக்கை
பத்தாம் வகுப்பு	__________
,, மெட்ரிக்குலேஷன்	__________
பன்னிரண்டாம் வகுப்பு (பொது)	__________
,, (சிறப்புத்தமிழ்)	__________

இங்ஙனம்

நாள் :

தலைமையாசிரியர் / தலைமைத் தமிழாசிரியர்

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

1.	மதுரைத் தமிழ்ச்சங்க வரலாறு	12-00
2.	பன்னூற்றிரட்டு	5-00
3.	தமிழ்ச் சொல்லகராதி	25 00
4.	மாறனலங்காரம் (பொருளணியியலுரை)	25-00
5.	பெருந்தொகை (முதல் 50 பாடல்கள் மூலமும் உரையும்)	2-00
6.	குருகைமான்மியம்	10-00
7.	டி. சி. ஸ்ரீனிவாசய்யங்கார் நினைவு மலர்	1-00
8.	பெருந்தொகை	15-00
9.	செந்தமிழ்த் தொகுதி அட்டவணைக் குறிப்பு	
10.	செந்தமிழ்த் தொகுப்பு (ஓர் ஆண்டு)	10-00
11.	**கோவை கலம்பக நூல்கள்**	12-00

1. மாறனகப் பொருளும் திருப்பதிக் கோவையும்
2. மதுரை மும் மணிக் கோவை
3. சிர~மலைக்கோவை
4. கலசைக்கோவை
5. திருக்கலம்பகம் (மூலமும் உரையும்)
6. திருவருணைக் கலம்பகம்
7. குருமொழி வினாவிடை

12.	**உலா நூல்கள்**	10-00

1. திருவாரூருலா
2. திருச்சிறு புலியூர் உலா
3. விக்கிரம சோழனுலா
4. கடம்பர் கோவில் உலா
5. தேவையுலா
6. புலவராற்றுப்படை

13.	**பாமாலை நூல்கள்**	12-00

1. திருப்பணிமாலை
2. சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை (மூலமும் உரையும்)
3. திருக் குற்றாலமாலை
4. திருப்பு ல்லாணிமாலை
5. திணைமாலை நூற்றைம்பது (மூலமும் உரையும்)
6. கேசவப் பெருமாள் இரட்டை மணிமாலை
7. கலைசைச் சிலேடை வெண்பா
8. திருவாரூர் நான்மணிமாலை (மூலமும் உரையும்)

14. இலக்கிய நூல்கள் 12-00

1. முத்தொள்ளாயிரச் செய்யுள்
2. ஐந்திணையைம்பது
3. திருநூற்றந்தாதி (மூலமும் உரையும்)
4. பழமொழி (,, ,,)
5. சங்கர நயினார் கோவில் அந்தாதி
6. திருத்தணிக்கைத் திருவிருத்தம்
7. நான்மணிக்கடிகை (மூலமும் உரையும்)

15. இலக்கண நூல்கள் 5-00

1. அரும்பொருள் விளக்க நிகண்டு
2. பன்னிரு பாட்டியல்
3. அநுமான விளக்கம்

16. மநிஷா பஞ்சகம்

1. மநிஷா பஞ்சகம்
2. ஞானாமிர்தக் கட்டளை
3. அட்டாங்க யோகக் குறள்
4. இராமோதந்தம்

செந்தமிழ்

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இவ்விதழ் ஆண்டுக்கு நான்குமுறை வெளியிடப்பெறுவது. ஆண்டுச் சந்தா ரூ. 15-00. **செந்தமிழைக் கண்ணுறும்** தமிழன்பர்கள் சந்தாதாரராகச் சேர்ந்து பிறரையும் சந்தாதாரராகச் சேரத் தூண்டி இதழின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு

1. புத்தகங்கள் வேண்டுவோர் தேவைக்கு எழுதும்பொழுது 25 விழுக்காடு முன் பணம் அனுப்ப வேண்டும். பாக்கித் தொகைக்கு நூல்கள் வி. பி. பி மூலம் அனுப்பப்படும்.
2. விற்பனையாளர்களுக்கும், நூலகத்திற்கும் 15 விழுக்காடு கழிவு கொடுக்கப்படும்.
3. நூல்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குபவரே ஏற்க வேண்டும்.

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை-1.

திருப்பதி பிரிண்டர்ஸ் ★ மதுரை-1.